# பகுதி—II


| | பக்கம் |
| --- | --- |
| மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் | ( i–xxxxv ) |
| ஆளணி | ( xxxxvi ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும் | ( i ) |
| நாணய வெளியீடு | ( viii ) |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | ( ix ) |
| வங்கி மேற்பார்வை | ( x ) |
| நிதிக் கூட்டு நிலையங்களின் மேற்பார்வை | ( xi ) |
| அபிவிருத்தி நிதி | ( xiii ) |
| கிராமியக் கொடுகடன் | ( xxi ) |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | ( xxvii ) |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | ( xxxii ) |
| ஊழியர் சேமநிதியம் | ( xxxii ) |
| செலாவணிக் கட்டுப்பாடு | ( xxxv ) |
| பொதுப் படுகடன் | ( xxxviii ) |
| பிரதேச அலுவலகம்—மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை | ( xxxix ) |
| தகவல்களும் வெளியீடுகளும் | ( xxxxii ) |
| ஆய்வரங்குகள் | ( xxxxiii ) |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | ( xxxxiii ) |
| தரவு செய்முறைப்படுத்தல் | ( xxxxiv ) |
| முகாமைக் கணக்காய்வு | ( xxxxiv ) |
| அளவீடுகளும் தரவுச்சேகரிப்பும் | ( xxxxiv ) |
| பயிற்சி | ( xxxxv ) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1988 திசெம்பர் 30 ஆம் நாளின்படியான ஐந்தொகையும் 1988 திசெம்பர் 30 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

1988 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 553,316 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் அவற்றின் மட்டத்திலும்விட 21.8 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உள்நாட்டுச் சொத்துக்களில் (35.7 சதவீதம்) ஏற்பட்ட உயர்வும் ஏனைய சொத்துக்கள் கணக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் (6.7 சதவீதம்) காரணங்களாகும். உள்நாட்டுச் சொத்துக்களில், அரசிற்கான கடன்களும், முற்பணங்களும் (17.6 சதவீதம்), நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் (14.1 சதவீதம்), குறுங்காலக் கடன்கள் (8.7 சதவீதம்), நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் (10.0 சதவீதம்), அரச, அரச உத்தரவாதப் பிணைகள் (44.8 சதவீதம்) ஆகியவற்றில் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும் வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு 13.8 சதவீதங் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. ஆய்விற்குரிய ஆண்டில் வங்கியின் பொறுப்புக்கள் முக்கியமாகச் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (35.2 சதவீதம்), வைப்புப் பொறுப்புக்கள் (68.8 சதவீதம்), நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திலுள்ள நிலுவை (47.1 சதவீதம்) ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக ஏற்பட்டன. இவ்வதிகரிப்புக்கள் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியினால் (87.2 சதவீதம்) எதிரீடு செய்யப்பட்டன.

1988 ஆம் ஆண்டுக்கான வங்கியின் வருவாய் ரூ. 55,816 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 37.6 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. செலவு ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கல்கள் பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கல்கள் என்பனவற்றிற்காக இடமளித்த பின்னர் மத்திய வங்கியின் தேறிய இலாபம் ரூ. 20,100 இலட்சமாக விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன் நியதிகளின்படி வங்கியின் மிகைக்கு ரூ. 100 இலட்சம் மாற்றப்பட வேண்டியிருந்தது. மிகுதியான ரூ. 20,000 இலட்சங் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின் படி அரசிற்குச் செலுத்தப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடனான அதன் கொடுக்கல் வாங்கல்களுக்காக இலங்கை ரூபாவிற்கு எதிரான ஐ.அ. டொலரின் நாளாந்த உடன்வாங்கும் விற்கும் வீதங்களைத் தொடர்ந்தும் தீர்மானித்துவந்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கான உடன்வாங்கும் விற்கும் வீதங்களுக்கிடையான வேறுபாடு ஒவ்வொரு 100 ஐ.அ. டொலருக்கும் ரூ. 3.00 ஆக விளங்கியது. 1988 ஆம் ஆண்டில் இது தொடர்பாகக் குறிப்பிடத்தக்க கொள்கை மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை.

## இலங்கை மத்திய

### 1988 ஆம் ஆண்டு

| 1987 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1988 திசெம்பர் 30 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதன கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 81,000,000 | 96,000,000 | மிகை ... | 82,000,000 | 97,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 14,373,290,993 | | தாள்கள் ... | 19,553,357,957 | |
| 689,812,604 | 15,063,103,597 | குத்திகள் ... | 817,983,685 | 20,371,341,642 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,553,255,643 | | அரசு ... | 3,513,523,741 | |
| 163,115,650 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ... | 159,573,844 | |
| 4,046,916,751 | | வர்த்தக வங்கிகள் ... | 5,033,453,381 | |
| 581,503,815 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 3,905,462,348 | |
| 91,413 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 66,519,400/– கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி ... | 401,801 | |
| 1,354,268,631 | 7,699,151,903 | ஏனையவைகள் ... | 386,773,480 | 12,999,188,595 |
| | 1,801,653,900 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 231,227,500 |
| | 1,275,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 1,875,000,000 |
| | 200,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்குகள் ... | | 220,000,000 |
| | 19,575,000 | மத்திய வங்கிப் பிணைகள் ... | | 19,325,000 |
| | 19,289,714,583 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ... | | 19,518,552,639 |
| | 45,444,198,983 | | | 55,331,635,376 |

### 1988 திசெம்பர் 30 ஆம் நாள் முடிவுற்ற

| 1987 திசெம்பர் 31 | | | 1988 திசெம்பர் 30 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | 2,342,506,824 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படிசெய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 3,537,195,117 |
| | | **1988 திசெம்பர் 30இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம்** | | |
| 63,627,154 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு நாணய விதிச்சட்டத்தின் 39 (அ) பிரிவின் நியதிகளின்கீழ் தீர்ப்பனவு செய்யப்பட்ட நிலுவை | 34,372,461 | |
| 1,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 10,000,000 | |
| 1,650,000,000 | 1,714,627,154 | நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 2,000,000,000 | 2,044,372,461 |
| | 4,057,133,978 | | | 5,581,567,578 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு:**

1988ஆம் அண்டு திசெம்பர் 30ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணயவிதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7.
1989, ஏப்பிறல் 11

டபிள்யூ. காமினி ஏபா
கணக்காய்வாளர் நாயகம்

## வங்கியின் ஐந்தொகை

### திசெம்பர் 30ஆம் நாளில் உள்ளபடி

| 1987 திசெம்பர் 31 ரூபா | 1987 திசெம்பர் 31 ரூபா | சொத்துக்கள் | 1988 திசெம்பர் 30 ரூபா | 1988 திசெம்பர் 30 ரூபா |
|---|---|---|---|---|
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 3,204,821,056 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 2,683,093,809 | |
| 5,629,946.335 | | *வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும்... | 4,929,183,221 | |
| 3,398,272 | 8,838,165,663 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 2,704,443 | 7,614,981,473 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 5,268,673,355 | | அரசிற்கு ... | 6,194,673,355 | |
| 1,005,873,320 | | ஏனையவற்றிற்கு–நடுத்தர, நீண்டகால ... | 1,147,825,912 | |
| 2,490,282,769 | | குறுங்கால ... | 2,705,925,672 | |
| 20,888,161,290 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 30,244,061,536 | |
| 200,000,000 | 29,852,990,734 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் ... | 220,000,000 | 40,512,486,475 |
| | 6,753,042,586 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 7,204,167,428 |
| | | *அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5.527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூபா 2,933,697/– ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.) | | |
| | 45,444,198,983 | | | 55,331,635,376 |

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1987 திசெம்பர் 31 | 1987 திசெம்பர் 31 ரூபா | | 1988 திசெம்பர் 30 | 1988 திசெம்பர் 30 ரூபா |
|---|---|---|---|---|
| | 4,057,133,978 | பெறப்பட்ட வட்டி, ஏனையவை | | 5,581,567,578 |
| | 4,057,133,978 | | | 5,581,567,578 |

எச். என். எஸ். கருணாதிலக
ஆளுநர்

என். ஏ. தர்மபந்து
முதன்மைக் கணக்காளர்

முன்மாற்றுச் செலாவணி வீதங்களில் உறுதிப்பாட்டினைப் பேணும் பொருட்டு 3 மாதங்கள் வரையான முன்மாற்று ஐ.அ. டொலர்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கி தேவையான வேளைகளில் முன்மாற்றுச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டு வந்தது. மூன்று மாதங்கள் வரையான ஐ.அ. டொலர்களைக் கொள்வனவு செய்வதில் மத்திய வங்கி முன்மாற்றுச் சந்தையில் ஒழுங்காகக் காணப்பட்டது.

கடந்த காலத்தினைப் போலவே, மத்திய வங்கி அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைப் பன்னாட்டுப்பண, மூலதனச் சந்தைகளில் வைப்புக்களாகவும், நிறைகாப்பு முதலீடுகளாகவும் வைத்திருந்தது.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

1988 ஆம் ஆண்டுப் பகுதியில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய வசதிகளினூடாக இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 72,530 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 134,070 இலட்சங்களாக விளங்கியது.

வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1987 இன் ரூ. 5,770 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 33,050 இலட்சமாக விளங்கியது. ஆறு மாதங்கள் வரைக்குமான உடன் மாற்று, முன்மாற்று வீதங்களான நாணயங்களின் விற்பனைகளும், கொள்வனவுகளும் தொடர்ந்தும் நடைபெற்றன. இதில் சம்பந்தப்பட்ட நாணயங்களாக வங்காளதேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபா, ஈரானிய ரியால், நேபாள ரூபா, பாக்கித்தான் ரூபா என்பன விளங்கின.

1988 பெப்புருவரியில் கொழும்பில் கூடிய ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்கள் சபை பின்வரும் எடுத்துரைப்புக்களை ஆராய்வதற்காகத் தொழில் நுட்பக் குழு ஒன்றை நியமித்தது:—

(அ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தில் பங்காற்றும் நாடுகளுக்கிடையில் பண்டமாற்று வசதி ஒன்றினை அமைத்தல்.

(ஆ) ஆசியத் தீர்ப்பனவு நாணயங்களில் அல்லது ஆசிய நாணய அலகுகளில் அமைந்த பயணிகள் காசோலைகளையும், கொடுகடன் அட்டைகளையும் வழங்குதல்.

1988 மேயில் கொழும்பில் கூடிய தொழில்நுட்பக் குழு எடுத்துரைப்புக்களின் மீதான அறிக்கை ஒன்றினைப் பணிப்பாளர்கள் சபையின் தலைவரிடம் சமர்ப்பித்தது.

**குறுங்காலக் கொடுகடன்**

அரச, அரச உத்தரவாதப் பிணைகளைப் பொறுப்பாக வைத்து வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதமும் (வங்கி வீதம்) வர்த்தக மற்றும் உற்பத்திக் கடன்கள் தொடர்பான

வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாக வைத்துப் பெறப்படும் கடன்கள் மீதான வட்டியும் 1988 திசெம்பர் 12 வரை ஆண்டிற்கு 10 சதவீதமாக மாற்றமின்றி விளங்கின. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83 (1) (இ) நியதிகளின்படி வர்த்தக வங்கிகளுக்கு அவற்றின் திரவத் தன்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தற்காலிக கடன் வசதியை வழங்குகின்ற ஒரு திட்டத்தினை வங்கி 1988 திசெம்பர் 13 இல் ஏற்படுத்தியது. அத்தகைய கடன் வழங்கலுக்கான வட்டி வீதம் ஆண்டிற்கு 15 சத வீதமாக விளங்கியது. இத்திட்டம் 1989 சனவரி 31 இல் நிறுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் திட்டங்களின் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கிக் கடன் வழங்கல்கள் இவ்வாண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. மரபுவழி (வகை 1), மரபுவழியல்லா (வகை 11) என்பவற்றின் ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் காலப்பகுதி 90 நாட்களாகவே இருந்தது. எனினும் இருவகைகளிலும் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலும் 30 நாட்களைக் கொண்ட மேலுமொரு நீடிப்பு மொத்தமாக 120 நாட்களுக்கு வழங்கப்பட்டது. மத்திய வங்கி ஏற்றுமதியாளர்களுக்கு 1988 ஒத்தோபர் 1 இலிருந்து 1989 சனவரி 31 வரையயான காலப்பகுதியில் ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையிலும் ஆகக் கூடியது 150 நாட்கள் வரையில் ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதியின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் காலத்தை நீடிப்பதன் மூலம் நிவாரணம் வழங்குவதற்கும் தீர்மானித்தது. இவ்வசதி 1989 சனவரி 31 இல் புறக்கீடு செய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

வகை 1 இன் கீழான ஏற்றுமதி கொடுகடன்களுக்கான மீள் நிதியிடல் தொடர்பான வட்டி வீதம் ஆண்டுக்கு 11 சதவீதமாகவும், மீள் கடன் வழங்கல் வீதம் ஆண்டுக்கு 14 சதவீதமாகவும் தொடர்ந்தும் விளங்கியது. வகை 11 இன் ஏற்றுமதிகளுக்குப் பொருந்தக்கூடிய தொடர்பான வீதங்கள் முறையே 6 சத வீதமாகவும், 9.8 சதவீதமாகவும் இருந்தன. ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதியின் வகை 1 இன் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடலின் ஆகக்கூடிய உச்ச எல்லை ரூ. 16,630 இலட்சமாக விளங்கியது. குறிப்பிட்ட ஏற்றுமதிகளின் விற்பனைப் பணப்பெறுகைகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் இலங்கையில் பெறப்படும்வேளையில் அவ்வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களின்மீது விதிக்கப்பட்ட வட்டியில் ஆண்டிற்கு 4 சதவீதப் புள்ளிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் மீளளிப்புச் செய்தது. எனினும் இப் புள்ளிகள் வட்டித் தள்ளுபடி வசதி இவ்விரண்டு வகைகளிலும் 90 நாள் தொடக்க காலப்பகுதிக்கு மட்டுமே பொருந்தும்.

நெல், காய்கறிகள் மற்றும் குறிப்பிட்ட உணவுப் பயிர்களின் உற்பத்தி தொடர்பாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனி நபர்களின் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக் கொண்டு அவற்றிற்கெதிராக வழங்கப்பட்ட மத்திய வங்கி முற்பணங்கள் மீதான வட்டி வீதம் தொடர்ந்தும் ஆண்டிற்கு 1.5 சத வீதமாகவே இருந்தது. இம்முற்பணங்கள் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நெல் கொள்வனவு, உள்ளூரில் பயிரிடப்படும் குறிப்பிட்ட சில பயிர்களின் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் என்பனவற்றிற்கு நிதியிடுவதற்காகக் கூட்டுற வுச் சங்கங்கள், வேளாண்மைப்பணி நிலையங்கள், அதிகாரம் பெற்ற தனியாட்கள் ஆகியோரின் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாகக் கொண்டு அவற்றிற் கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் மாற்றமின்றி ஆண்டிற்கு 3 சதவீதமாக விளங்கியது.

### நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

1988 ஆம் ஆண்டில் மத்திய வங்கி நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. இத்திட்டத்தில் வழங்கப்பட்ட வழமையான மீள் நிதியிடல் வசதிகளுடன் சுற்றுலாக் கைத்தொழிலின் நிலுவையி லிருந்த வட்டியினதும், கடன் தவணைகளினதும் மூலதனமயமாக்கலை மீள் நிதியிடு வதனையும் மத்திய வங்கி தொடர்ந்து மேற்கொண்டது. அமைச்சரவைப் பணிப் புரையின்படி சுற்றுலாக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன் களின்மீது அறவிடப்படும் ஆண்டுக்கு 8 சதவீத வட்டி வீதத்தை மத்திய வங்கி 1988 ஏப்பிறல் 1 இலிருந்து ஆண்டுக்கு 1 சதவீதமாகக் குறைத்தது. மேலும் கடற்றொழில்துறை, வங்கிப் புத்தாக்கக் கடன்கள், சீன இஞ்சிப் பயிர்ச் செய்கைக் காக வழங்கப்பட்ட கடன்கள் என்பவற்றிற்கு மீள் அட்டவணையிடல் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடன்களையும் மத்திய வங்கி வழங்கியது.

நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் நிலுவை ரூ. 12,750 இலட்சத்திலிருந்து 1988 திசெம்பரில் ரூ. 18,750 இலட்சத்திற்கு அதிகரிக்கப் பட்டதோடு இதில் ரூ. 11,480 இலட்சம் 1988 திசெம்பர் 30 இல் கொடுகடன் நிறுவனங்களின் வெளிநின்ற தொகையாகக் காணப்பட்டது.

மேலும் நிதிக் கூட்டு நிலையங்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 16 இன் துணைப்பிரிவு 3 (அ) இன் நியதிகளின்படி தற்காலிகத் திரவத்தன்மைப் பிரச்சினை களையும் அல்லது நாணயச் சபையினால் நிர்வாகமும் முகாமைத்துவமும் பொறுப் பேற்கப்பட்ட வங்கியல்லா நிதி நிறுவனங்களுடன் வர்த்தக வங்கிகளால் செய்யப் பட்ட கடன் வழங்கல் தொழிற்பாடுகள் தொடர்பாக நிதி வசதிகளை வழங்கும் திட்டமொன்றை மத்திய வங்கி ஏற்படுத்தியது.

1987 மாச்சு 16 இலிருந்து தொழிற்பாட்டுக்கு வந்த கொடுகடன் உத்தர வாதத் திட்டம் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் திட்டத்தின் வகை 1 எனக் குறிப்பிட்ட கொடுகடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு உத்தர வாதங்களை வழங்கியது. 1988 இல் ''பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டம்'', ''இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற் றிட்டக் கடன் திட்டம்'', அநுராதபுர மாவட்டத்திற்கான ''கிராமிய ஏற்பு, சுயதொழில் வாய்ப்புத் திட்டம்'' என்பன கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன.

**ஒதுக்குத் தேவைகள்**

1988 பெப்புருவரி 26 இலிருந்து வர்த்தக வங்கிகளின் கேள்வி, தவணை, சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களின் மீதான நியதி ஒதுக்கு விகிதம் ஆண்டிற்கு 3 சதவீதப் புள்ளிகளால் 13 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. 1988 செத்தெம்பர் 16 இலிருந்து இது மேலும் 2 சதவீதப் புள்ளிகளால் ஆண்டிற்கு 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இரு தடவைகளிலும் இவ்வதிகரிப்புக்களை இலங்கை அரசின் திறைசேரி உண்டியல்களின் வடிவில் பேணுவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஒதுக்குத் தேவைகளுக்காக வைத்திருக்கப்பட வேண்டிய ஆண்டிற்கு 15 சதவீத ஒதுக்கு விகிதத்தில் திறைசேரி உண்டியல்களின் அளவு 5 சதவீதப் புள்ளிகளாக அமைந்தது.

**திறைசேரி உண்டியல்களில் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்**

மத்திய வங்கி திறைசேரி உண்டியல்களில் அதன் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனை 1987 இன் ரூ. 488,080 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 613,610 இலட்சத்திற்கு அதிகரித்தது. மொத்தக் கொள்வனவுகளும் இதே காலப்பகுதியில் ரூ. 242,550 இலட்சத்திலிருந்து ரூ. 253,990 இலட்சத்திற்கு அதிகரித்தன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியல்லாத் துறையினால் இரண்டாந்தரச் சந்தையில் செய்யப்பட்ட முதலீடுகள் 1988 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டின. வங்கியல்லாத் துறைக்கான தேறிய விற்பனைகளின் மொத்தத் தொகை 1987 இன் ரூ. 60,980 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 75,600 இலட்சங்களுக்கு அதிகரித்தது.

இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்க கழிவு வீதங்கள் ஆண்டின் முன்னரைப்பகுதியில் 10 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்குமிடையே வேறுபட்டவேளையில் ஆண்டின் பின்னரைப் பகுதியில் 13 சதவீதத்திற்கும், 18 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன.

**இந்தியாவுக்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964 இல் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதைத் துரிதப்படுத்துவதற்கான இரு திட்டங்களையும் அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.

**ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி**

ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக வர்த்தக வங்கிகளால் செய்யப்பட்ட கோரல்களை மீளளிப்பதனை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்து மேற்கொண்டது. 1988 இல் ரூ. 7,980 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை மீளளிக்கப்பட்டது.

**கட்டாயச் சேமிப்பு நிதியம்**

மத்திய வங்கி 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும், 1972இன் எண் 15 கொண்ட வருமான உச்ச வரம்பு, கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாது காவலனுகத் தொடர்ந்தும் விளங்கியது. இவ்வாண்டில் பெறப்பட்ட 411 விண்ணப் பங்கள் தொடர்பாக வங்கி ரூ. 12 இலட்சத்தை (வட்டி உட்பட) உதவுநர்களுக்கு வழங்கியது.

**அரச கணக்குகள்**

அரசின் வங்கியாளராக வங்கித் தொழில் திணைக்களத்தின் அரச கணக்குக் கிளையானது அரச திணைக்களங்கள், அரச முகவர்கள் நிறுவனங்கள் மற்றும் சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியது. 1988 திசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை 164 ஆகும்.

**நாணய வெளியீடு**

அதிகரித்துச் செல்லும் நாணயத்தின் தேவைகளை ஈடுசெய்யும் வகையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 1988 இல் தொடர்ந்தும் உயர்வடைந்தது. மொத்த நாணய வழங்கல் முன்னைய ஆண்டினைவிட ரூ. 53,080 இலட்சம் அல்லது 35 சதவீதத்தால் உயர்வடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 203,710 இலட்சமாக விளங்கியது.

சுற்றோட்டத்திலுள்ள தாள்களின் பெறுமதி ரூ. 195,530 இலட்சத்திற்கு உயர்வடைந்து 1987 இறுதியிலிருந்ததைவிட 36 சதவீதம் கூடுதலாகக் காணப் பட்டது. சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் 1988 இறுதியிலுள்ள மொத்த நாணய வழங்கலில் 96 சதவீதத்தைக் கொண்டிருந்தன. பெறுமதி நியதிகளில் சுற்றோட் டத்திலுள்ள தாள்களில் ரூ. 1,000 ரூபாத்தாள் 44 சதவீதத்தைக் கொண் டிருந்தது. இதனையடுத்து 500 ரூபா, 100 ரூபா, 50 ரூபா, 10 ரூபா, 20 ரூபாத் தாள்கள் இதே ஒழுங்கில் காணப்பட்டன. அளவு நியதிகளில் 10 ரூபாத் தாள் அதிகூடிய சுற்றோட்டத்தையும் அதனையடுத்து 100 ரூபா, 50 ரூபா, 20 ரூபா, 500 ரூபா, 1,000 ரூபாத் தாள்களும் இதே ஒழுங்கில் காணப்பட்டன. வங்கி 1 ரூபா, 2 ரூபா, 5 ரூபாத் தாள்களைச் சுற்றோட்டத்திலிருந்து படிப்படியாகப் புறக்கீடு செய்யும் அதன் கொள்கையினைத் தொடர்ந்து மேற்கொண்டது.

1988 இல் 360 இலட்சங் கொண்ட பழுதடைந்த தாள்கள் சுற்றோட்டத்தி லிருந்து புறக்கீடு செய்யப்பட்டன. ரூ. 14,930 இலட்சம் முகப்புப் பெறுமதியைக் கொண்ட இவ்வகைத் தாள்கள் செல்லுபடியற்றதாக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

1988 இறுதியில் சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குத்திகளின் பெறுமதி ரூ. 8,180 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 18.6 சதவீத அதிகரிப் பைக் காட்டியது. (இது ரூ. 1,290 இலட்சம் பெறுமதியான ஞாபகார்த்த நாணயக் குத்திகளையும் உள்ளடக்கியுள்ளது) பெறுமதிகளின் நியதியில், சுற்றோட் டத்திலுள்ள மொத்த நாணயக் குத்திகள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாண யத்தில் 4 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

1988 இன் முதல் காலாண்டில் இலங்கை அரசுடன் கூட்டாக அமைக்கப் பட்ட கூட்டு முயற்சி பாதுகாப்பு அச்சிடல் பொறித்தொகுதியான வரையறுக்கப் பட்ட (தனியார்) பிராட்பறி வில்கின்சன் லங்காவினுல் அச்சிடப்பட்ட தாள்களின் முதல் தொகுதியை வங்கி பொறுப்பேற்று வழங்கியது.

## வங்கித்தொழில் அபிவிருத்தி

1988 இல் உள்நாட்டுத் தனியார் வங்கித் தொழில்துறையானது வரை யறுக்கப்பட்ட செலான் இரஸ்ட் வங்கி நிறுவப்பட்டதோடு மேலும் வலுப்படுத்தப் பட்டது. இவ்வங்கி 1988 மாச்சு 24 இல் வியாபாரத்தைத் தொடங்கியது. இப்புதிய வங்கியுடன் நாட்டில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1988 திசெம்பர் இறுதியில் 25 ஆக விளங்கியதுடன் இது 19 வெளிநாட்டு வங்கிகளையும், 6 உள்நாட்டு வங்கிகளையும் அடக்கியுள்ளது. இவ் வாண்டில் மொத்தமாக 8 வங்கிக் கிளைகளும் திறக்கப்பட்டன.

1988 இல் இலங்கை வங்கியின் நுவரெலியா மாவட்டத்திலுள்ள கினிகத் தேனைக்கிளையின் வங்கித் தொழில் நடவடிக்கைகள் கண்டி மாவட்டத்திலுள்ள நாவலப்பிட்டிக் கிளையுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை வங்கி கினிகத்தேனைக் கிளை மூடப்பட்டது. இலங்கை வங்கியின் புறக்கோட்டை மத்திய வீதிக் கிளையும் கெப்பிட்டிபொலக் கிளையும் முறையே மத்திய பெரும் சந்தைக் கிளையுடனும் வெலிமடைக் கிளையுடனும் இணைக்கப்பட்டன. இதன் விளைவாகப் புறக்கோட்டை மத்திய வீதிக் கிளையும் கெப்பிட்டிப்பொலக் கிளையும் மூடப் பட்டன. வெலிமடை, வத்தேகம, மாவத்தகம ஆகிய இடங்களிலிருந்த இலங்கை வங்கியின் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் முதன்மைக் கிளைகளாகத் தரமுயர்த்தப்பட்டன. எனினும் 1987 இறுதியில் 239 ஆக விளங்கிய இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1988 இறுதியிலும் அதே மட்டத்தில் மாற்றமுருதிருந்தது. 1988 இல் மக்கள் வங்கி புதிய கிளைகள் எதனையும் திறக்கவில்லை. இது 1988 இல் அரச வங்கிகள் புதிய கிளைகளை அமைப் பதைவிட ஏற்கனவேயுள்ள கிளையமைப்பினைச் சிக்கனப்படுத்துவதிலேயே கூடிய கவனத்தைக் கொண்டிருந்தனபோல் தெரிகிறது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி மகரகமவில் கிளையொன்றினைத் திறந்ததுடன் அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 1988 இறுதியில் 16 ஆக உயர்த்தியது. சம்பத் வங்கி பொரளை, நுகேகொட, புறக்கோட்டை ஆகிய இடங்களில் 3 கிளைகளைத் திறந்தது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகள் நீங்கலாக 1988 மாச்சில் வியாபாரத்தைத் தொடங்கிய செலான் இரஸ்ட் வங்கியோடு வர்த்தக வங்கிகளின் முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1988 திசெம்பர் இறுதியில் 628 ஆக விளங்கியது. நாரகன்பிட்டியிலும், கொறணையிலும் இரண்டு கிளைகளைத் திறந்ததன் மூலம் வங்கிக் கிளை விரிவாக்கத்திற்குத் தேசிய சேமிப்பு வங்கி பங்களித்தது.

1988 இல் இலங்கையின் வங்கித்தொழில் துறையில் மற்றுமோர் முக்கிய நிகழ்ச்சி 1988 இன் எண் 30 கொண்ட வங்கித் தொழில் சட்டம் நிறைவேற்றப் பட்டமையாகும். இச்சட்டம் இயற்றப்பட்டதோடு நாட்டின் வங்கித்தொழில் முறை ஒழுங்கான முறையில் அபிவிருத்தியடைவதை உறுதிப்படுத்தும் பொருட்டு வர்த்தக வங்கிகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் ஒரு பொதுவான வங்கித் தொழில் சட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட்டன.

வங்கித்தொழில் துறையில் மற்றுமோர் குறிப்பிடத்தக்க விடயம் ''முகவர் வங்கித்தொழில்'' என்ற விடயத்தினை நடைமுறைப்படுத்தியமையாகும். அரசினால் செய்யப்பட்ட ஆலோசனை ஒன்றின் பேரில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி என்பன 1988 இன் இறுதிப் பகுதியில் முகவர் வங்கித் தொழில் திட்டத்தை நடைமுறைப்படுத்தின. சம்பத் வங்கி பியகமப் பகுதியில் மாதிரிச் செயற்றிட்டமொன்றாக இத்திட்டத்தைத் தொடங்கியவேளை யில் அரச வங்கிகள் இரண்டும் நாடளாவிய அடிப்படையில் இத்திட்டத்தைச் செயற்படுத்தின. முகவர் வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் வங்கிகளால் குறிப் பிட்ட ஒழுங்குவிதியின் படி நியமிக்கப்பட்ட முகவர்களுக்குப் பிணைகளுக்கெதிராகக் கடன் வழங்கத்தக்க நிதிகள் வழங்கப்படும். இம்முகவர்கள் தொடர்பான வங்கி யினால் குறிப்பிடப்பட்ட அதியுயர் வீதத்திற்கு உட்பட்ட ஒரு கடன் வழங்கல் வீதத்தில் கடன்படுநர்களுக்கு நிதிகளை மீளக் கடன் வழங்குவதற்கு எதிர்பார்க்கப் படுகிறார்கள். இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுடன் கடன்படுநர்கள் சார்பு ரீதியாகக் குறைந்த செலவில் நிதிகளைப் பெறக்கூடியதாக இருக்குமெனவும் அத்துடன் ஒழுங்கற்ற கிராமியத் துறையின் சராசரி வட்டி வீதமும் வீழ்ச்சியடையு மெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வங்கி மேற்பார்வை

1987 இல் தொடங்கிய ஐந்து வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்களை மத்திய வங்கி 1988 இல் முடித்துக் கொண்டது. மேலும் பதினொரு வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்கள் (இரண்டு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் உட்பட) 1988 இல் மேற்கொள்ளப்பட்டன. வங்கி, வர்த்தக வங்கிகளின் நிதி நிலைமைகளை அவ்வங்கிகளினால் வழங்கப்பட்ட மாதாந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றின் அடிப்படையில் தொடர்ந்தும் கண்காணித்தது. 1987 இல் வர்த்தக வங்கிகளின் இலாபத் தன்மையும், இவ்வங்கிகளினால் வழங்கப்பட்ட திரட்டுக்களின் அடிப்படை யில் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

1988 இன் வங்கித் தொழில் சட்டம் எண் 30, 1988 செத்தெம்பர் 16 இல் நடைமுறைக்கு வந்ததுடன் வங்கி இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டிய பணிப் புரைகள்/தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வடிவமைப்பதில் ஈடுபட்டிருந்தது. இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு வங்கிகள் அவற்றின் ஊழியர்களுக்கு வழங்கும் பயிற்சியையும் வங்கி அரையாண்டு அடிப்படையில் கண்காணித்து வந்தது.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கி களினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களை மாதாந்த அடிப்படையில் மத்திய வங்கி தொடர்ந்தும் கண்காணித்தது.

1987 இல் தொடங்கிய வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் என்பவற்றை உள்ளடக்கிய வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை வங்கி நிர்வகித்தது. 156 கூட்டுறவுக் கிராமிய வங்கி களிடமிருந்து காப்புறுதிக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் இவ்வங்கி களில் 12 அவற்றின் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படு முன்னரே பரீட்சிக் கப்பட்டன. (பரீட்சிக்கப்பட்ட 12 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் 5 கொழும்பு மாவட்டத்திலும், 6 கம்பகா மாவட்டத்திலும், 1 குருநாகல் மாவட்டத்திலும் காணப்பட்டன). இரண்டு வர்த்தக வங்கிகளும் இரண்டு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் ஒரு கூட்டுறவுக் கிராமிய வங்கியும் இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டன.

## நிதிக் கூட்டுநிலையங்களின் மேற்பார்வை

1988 இன் எண் 78 கொண்ட புதிய நிதிக் கூட்டுநிலையங்கள் சட்டத்தின் கீழ் நிதிக் கூட்டுநிலையங்களை ஒழுங்குபடுத்தவும் மேற்பார்வை செய்வதற்கும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வையிடலுக்கு ஒரு புதிய திணைக்களம் அமைக்கப்படுவதற்கு நாணயச் சபை 1988 திசெம்பரில் ஒப்புதலளித்தது.

1988 இல் நாணயச் சபையினால் ஒரு புதிய நிதிக் கூட்டுநிலையம் பதிவு செய்யப்பட்டதுடன் ஆண்டு இறுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை 72 ஆக உயர்த்தப்பட்டது.

1987 இன் இறுதியில் தொடங்கிய 32 நிதிக் கூட்டுநிலையங்களின் நிலையப் பரிசோதனைகள் 1988 இல் முடிவடைந்தன. மத்திய வங்கியால் வழங்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகளுடன் நிதிக் கூட்டுநிலையங்கள் இசைந்து தொழிற்படுவதை உறுதிப்படுத்துவதற்காகப் பல உடன் பரிசோதனைகளும் மேற் கொள்ளப்பட்டன. திரவச் சொத்துக்களினதும் மூலதன நிதிகளினதும் தேவைப் பட்ட மட்டங்கள் பேணப்படுவதைக் கண்காணிப்பதற்குச் சிறப்பான கவனம் எடுக்கப்பட்டது. மேலும் மத்திய வங்கிக்கு ஒழுங்கான இடைவெளியில் அவர் களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி நிதிக் கூட்டுநிலையங்கள்மீது தொடர்ச்சியான மேற்பார்வை ஒன்று நடத்தப்பட்டது.

இவ்வாண்டில் பல நிதிக் கூட்டுநிலையங்கள் கடுமையான நிதி இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியிருந்ததுடன் இவை வைப்பாளர்களுக்கான அவற்றின் கடப் பாடுகளை நிறைவேற்ற இயலாமற் செய்தன. இவற்றில் நான்கு கூட்டுநிலையங்கள் 1988 இல் இடைநிறுத்தப்பட்டன. நிதிக் கூட்டுநிலையங்களின் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தற்போதுள்ள விதிகள் சிக்கலான பிரச்சினைகளைக் கையாளுவதற்கு போதாமையாக இருப்பதால் புதிய சட்டம் ஒன்றின் மூலம் மத்திய வங்கியின் அதிகாரங்களை விரிவுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி 1988 யூனில் அரச பிணைய கட்டளையின் பிரிவு 5 இன் நியதிகளின்படி மாண்புமிகு சனாதிபதியினால் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகளின் மூலம் மத்திய வங்கிக்குச் சில மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதன் பின்னர், இந்த இடைநிறுத்தப் பட்ட நான்கு நிதிக் கூட்டு நிலையங்களின் நிருவாகமும் முகாமைத்துவமும் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இவற்றில் இரண்டு முகாமைத்துவம் முகவர் நிலையங்களுக்குக் கையளிக்கப்பட்டவேளை ஏனைய இரு கூட்டு நிலையங்களின் முழுமையான கணக்காய்வினை மேற்கொள்வதற்காகக் கணக்காய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் ஒரு நிதிக் கூட்டுநிலையத்தின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு வழமையான தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக அனுமதியும் வழங்கப்பட்டது. புதிய ஒழுங்கு விதிகளின்கீழ், நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு கூட்டுநிலையத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்காகக் கூட்டுநிலையத்துடன் முகாமைத்துவத்தையும் பொறுப்பேற் பதற்கும் ஒரு கூட்டுநிலையத்திலிருந்து எந்தவொரு பணிப்பாளரையும் நீக்கு வதற்கும் தேவைப்படுமிடத்து ஒரு நிதிக் கூட்டுநிலையத்தின் புத்தகங்களையும் கணக்குகளையும் கணக்காய்வு செய்வதற்குக் கணக்காய்வாளர்களை நியமிக்கவும் நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1988 டிசெம்பரில், தற்போதுள்ள 1979 இன் எண் 27 கொண்ட கூட்டு நிலைய கட்டுப்பாட்டுச் சட்டம் இரத்துச் செய்யப்பட்டு 1988 டிசெம்பர் 18 இல் சட்டமாக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய புதிய சட்டமாகிய 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கூட்டுநிலையச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபையின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டன. இச்சட்டத்தின் ஏற்பாடுகளையும், இதன் கீழ் செய்யப்பட்ட விதிகளையும், பணிப் புரைகளையும் மீறும் நிதிக் கூட்டுநிலையங்கள்மீது அதிகளவு தண்டங்கள் விதிப் பதற்கு நாணயச் சபை அனுமதிக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் நிதிக் கூட்டுநிலையங்கள் பொதுக் கூட்டுநிலையங்களாக மாற்றப்பட்டு ரூ. 50 இலட்சத் திற்குக் குறையாத நிறைவான மூலதனமொன்று எல்லாக் காலங்களிலும் பேணப் பட வேண்டுமென்பது ஒரு தேவையாகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை களுடன் இசைவாகச் செயற்படுவதற்கு நிதிக் கூட்டுநிலையங்களுக்கு இரண்டு ஆண்டுக் காலம் வழங்கப்படும். நிதிக் கூட்டுநிலையங்களுக்கான தற்காலிக நிதி வசதிகளை நாணயச் சபை வழங்குவதற்கும் இப்புதிய சட்டம் ஏற்பாடு செய் துள்ளது. (நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88அ இன் கீழ் நிறுவப்பட்ட நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழான மீள் நிதியிடல் உட்பட) 1988 இல் இரு கூட்டுநிலையங்கள் அத்தகைய மீள் நிதியிடல் உதவி பெறத் தகுதியுடைய வையாக இருந்தன.

1988 இல், நிதிக் கூட்டுநிலையங்கள் மீதான மத்திய வங்கியின் மேற்பார்வை செய்யும் பங்கைப் பலப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வைப்புக்கள் மீது வழங்கத்தக்க அதியுயர் வட்டி வீதம் ஆண்டுக்கு 20 சதவீதமாக உயர்த்தப்பட்டமையைத் தொடர்ந்து சந்தையின் வட்டி வீதங்களில் உயர்ச்சிப் போக்குக் காணப்பட்டமையினால் நிதிக் கூட்டுநிலையங்களினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட வைப்புக்களுக்கு ஆண்டுக்கு 18 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்ட மேலெல்லை 1988 யூனில் தளர்த்தப்பட்டது. 1988 ஓகத்தில் 24 மாதங்களுக்கும் குறைந்த முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட வைப்புக்கள்மீது வழங்கத்தக்க அதியுயர் வட்டி வீதங்கள் ஆண்டுக்கு 21 சதவீதமுள்ள தனி வட்டியாக உயர்த்தப்பட்டதுடன் 24 மாதங்களும் அதற்கு மேலான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட வைப்புக்கள் மீது வழங்கத்தக்க வட்டி ஆண்டுக்கு 24 சதவீதமான தனி வட்டிக்கும் உயர்த்தப் பட்டு மேலும் தளர்த்தப்பட்டது.

1988 டிசெம்பரில் நாணயச் சபை இடர் நிலையிலுள்ள நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்குச் சில நிவாரணங்களை வழங்குவதற்கும் தீர் மானித்தது. 1988 டிசெம்பர் 31 இல் முதிர்ச்சியடைந்த வைப்புக்களின் முதல் தொகை தொடர்பாக வைப்பாளர்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு செய்யப்பட விருந்தது. ஒவ்வொரு வைப்புக்கும் ரூ. 20,000 கொண்ட தொகையொன்று அல்லது வட்டி நீங்கலாக முதிர்ச்சியடைந்த வைப்பின் 50 சதவீதம் இதில் எது குறைந்ததோ அத்தொகை நிதிக் கூட்டுநிலையங்களுக்கு வைப்பாளர் செலுத்தவேண் டிய கடன்களையும், ஏனைய தொகைகளையும் கழித்து வழங்கப்படவிருந்தது. அத் துடன் கூட்டுநிலையங்களை மூடுவதற்காகச் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுவரும் நிதிக் கூட்டுநிலையங்களின் வைப்பாளர்களுக்கும் இந்நிவார ணத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக மத்திய வங்கி சட்ட நடவடிக்கையை நிறுத்தி வைப்பதற்காகவும், அத்தகைய கூட்டுநிலையங்களின் நிருவாகத்தையும் முகாமைத்துவத்தையும் நாணயச் சபை அல்லது அதனால் நியமிக்கப்பட்ட முகவர் கள் பொறுப்பேற்பதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்காகவும் நீதிமன்ற ஒப்புதலை நாடியது.

## அபிவிருத்தி நிதி

### நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம்

நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகைகள் II, III, IV இன் கீழ் மீள் நிதியிடலுக்கான அனுமதி 1988 இல் மொத்தம் ரூ. 2,550 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட ரூ. 1,200 இலட்சங் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. மீள் நிதியிடலின் ஆகக்கூடிய பங்கான ரூ. 1,760 இலட்சம் அல்லது 69 சதவீதம் சுற்றுலா விடுதிகளைப் புதுப்பிப்பதற்கும் சுற்றுலா விடுதிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டியினை மூலதனப்படுத்தலுக்குமான வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கிய கைத்தொழில் களின் புத்தாக்கத்திற்கு வழங்கப்பட்டது. 1988 இல் வேளாண்மைத் துறைக்கான மீள் நிதியிடலின் ஒப்புதல் 1987 இன் மட்டத்துடன் ஒப்பிடுகையில் ஏறத்தாள இரண்டு மடங்காக ரூ. 430 இலட்சமாக விளங்கியது. இத்தொகை முழுவதும் பெருந்தோட்டத்துறைக்கான நடுத்தர, நீண்டகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத் தின் உள்நாட்டுச் செலவினை ஈடுசெய்வதற்காக வழங்கப்பட்ட ஒப்புதல்கள் தொடர்பானதாக விளங்கியது. இவ்வாண்டில் 'ஏற்றுமதி', 'கைத்தொழில்' துறைக்கான மீள் நிதியிடல் பயன்பாடு குறைவானதாகக் காணப்பட்டது. மீள் நிதியிடல் ஒப்புதல்களின் பகுப்பு அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2

**நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம்**
**(வகைகள் II—IVஇன் கீழான மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)**

(ரூபா பத்து இலட்சங்களில்)

| வகை | 1986 | | 1987 | | 1988 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதி யிடப்பட்ட தொகை |
| II ஏற்றுமதித்துறை ... | 41.4 | 29.0 | 36.9 | 25.8 | 27.2 | 19.0 |
| IIIஉம் IVஉம் | | | | | | |
| (i) வேளாண்மை ... | 134.4 | 80.6 | 38.3 | 23.0 | 72.0 | 43.2(அ) |
| (ii) கைத்தொழில் ... | 1.0 | 0.6 | 2.5 | 1.5 | 2.8 | 1.7 |
| (iii) சுற்றுலா விடுதிகள் | 2.5 | 1.5 | — | — | — | — |
| (iv) ஏனையவை ... | 16.5 | 14.7 | 52.0 | 31.2 | 15.0 | 15.0 |
| நலிவுற்ற கைத்தொழில்களை மீள் நன்னிலைப்படுத்தல் ... | 325.6 | 316.4 | 84.8 | 53.2 | 272.6 | 175.8(ஆ) |
| மொத்தம் | 521.4 | 442.8 | 214.5 | 134.7 | 389.6 | 254.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அ) நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மரப்பயிர்ச் செயற்றிட்டங்களுக்கு இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட 4 கடன்களையும் உள்ளடக்கும்.

(ஆ) இரண்டு சுற்றுலா விடுதிகளைப் புதுப்பிக்கவும், 13சுற்றுலா விடுதிச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவைகள் மீதான வட்டிகளின் முதலீட்டிற்கு வழங்கப்பட்ட இரண்டு கடன்களையும் உள்ளடக்கும்.

1984 இல் தொடங்கப்பட்டு 1985 இல் திருத்தப்பட்ட நிவாரண வழி முறைக்குப் பதிலாக 1988 மேயில் சுற்றுலா விடுதித்துறைக்குப் புதிய நிவாரண வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவ்வழிமுறையின் முக்கிய பண்புகள் பின்வருமாறு :—

1. சலுகைக் காலத்தின் நீடிப்பு

(i) சுற்றுலா விடுதிகளுக்கு வழங்கப்பட்ட வங்கிக் கடன்கள் தொடர்பான சலுகைக் காலம் 31.03.1993 வரை நீடிக்கப்பட்டதுடன் இச்சலுகைக் காலத்தில் இக்கடன்கள் மீதான வட்டி ஆண்டுக்கு 2 சதவீதமாகவும் அதன் பின்னர் அதிகூடிய வட்டி ஆண்டுக்கு 12 சதவீதமாகவும் விளங்கும்.

(ii) நிலுவையிலுள்ள வட்டியினை மூலதனமாக்குவதன் மூலம் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான சலுகைக் காலம் 1993.03.31 வரை நீடிக்கப்பட்டதுடன் இக்கடன்கள் மீதான வட்டி சலுகைக் காலத்திலும் அதன் பின்னரும் ஆண்டுக்கு 2 சதவீதமாக விளங்கும். இக்கடன்கள் மத்திய வங்கியால் மீள் நிதியிடப்பட்டிருப்பின் மீள் நிதியிடல் வட்டி வீதம் ஆண்டுக்கு 1 சதவீதமாகும்.

2. மீள் பெறுகைக் காலத்தின் நீடிப்பு

மீள் நிதியிடல் கடன்கள் உட்பட இவ்வகைக் கடன்களின் மீளப் பெறுகை 1993 ஏப்பிறலில் தொடங்கி பத்து ஆண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

3. மத்திய வங்கி மீள் நிதியிடலை நிறுத்தி வைத்தல்

வட்டியில் மூலதனமாக்கலினுல் உருவாக்கப்பட்ட கடன்களுக்காக வழங்கப்பட்ட மத்திய வங்கி மீள் நிதியிடல் 1988 மாச்சு 31 வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

முன்னைய நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மீள் அட்டவணையிடப்பட்ட சுற்றுலா விடுதிக் கடன்களினதும் வட்டியின் மூலப்படுத்தலுக்காக வழங்கப்பட்டு வெளிநிற்கும் மீள் நிதியிடல் கடன்களினதும் 31.12.1988 இன் படியான நிலைமை அட்டவணை 2.3 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3

**சுற்றுலாக் கைத்தொழிலுக்கான நிவாரணம் — கடன்களின் மீளட்டவணை**
**(1988 திசெம்பர் 31இலுள்ளபடி திரட்டிய மொத்தம்)**

| கொடுகடன் நிறுவனங்களின் பெயர் | உணவகங்களின் எண்ணிக்கை | மீளட்டவணையிடப்பட்டவை கடன்கள் (ரூபா) | மத்திய வங்கியினால் மீளநிதியிடப்பட்ட நிலுவையிலிருக்கும் வட்டி (ரூபா.) |
|---|---|---|---|
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ... | 22 | 223,775,943 | 90,201,968 |
| இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி ... | 13 | 155,623,000 | 54,039,834 |
| வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி ... | 03 | 27,420,547 | 7,092,128 |
| மக்கள் வங்கி ... | 11 | 47,655,170 | 2,222,470 |
| இலங்கை வங்கி ... | 06 | 80,289,282 | 3,902,520 |
| வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி ... | 03 | 14,958,020 | 7,427,263 |
| டியூச் வங்கி (ஆசியா) ... | 01 | 5,290,992 | 5,290,992 |
| மொத்தம் ... | 59 | 555,012,954 | 170,177,175 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்**

வங்கியினால் நிர்வகிக்கப்பட்ட நாலு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழான கொடுகடன் உத்தரவாத தொழிற்பாடுகளின் சுருக்கம் அட்டவணை 2.4 இல் தரப்பட்டுள்ளது.

**சிறு அளவுக் கைத்தொழில்கள் திட்டம்**

1978 இல் தொடங்கப்பட்ட சிறிய அளவுக் கைத்தொழில்கள் திட்டம் 1981 இறுதியில் அதன் தொழிற்பாடுகளை முடித்துக் கொண்டது. இக்காலப் பகுதியில் உத்தரவாதமளிக்கப்பட்ட 767 மொத்தக் கடன்களில் 572 கடன்கள் 1988 இறுதியில் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டன. இவ்வாண்டில் புதிய உத்தரவாதங்கள் எதுவும் புறக்கீடு செய்யப்படவோ/காலம் கடந்ததாகவோ காணப்படவில்லை. இதேவேளை வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன/தீர்க்கப்பட்டுள்ளன. 1988 இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட/தீர்க்கப்பட்ட கோரல்களின் மொத்த எண்ணிக்கை 57 ஆக விளங்கி ரூ. 16 இலட்சத்தைக் கொண்டிருந்தவேளை 73 உத்தரவாதங்கள் வெளி நிற்பவையாகவும் சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் ரூ. 9.3 இலட்சமாகவும் விளங்கின.

**மத்திய வங்கிக் கொடுகடன்**
**ஆண்டு முடிவில்**

| திட்டங்களும் ஆண்டுகளும் / விடயம் | சிறிய அளவுக் கைத்தொழில்கள் | | | |
|---|---|---|---|---|
| | 1987 | | 1988 | |
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| வழங்கப்பட்ட கடன்கள் ... ... | 767 | 31.2 | 767 | 31.2 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... ... | 767 | 23.4(அ) | 767 | 23.4(அ) |
| முழுமையாக மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் ... ... | 561 | 20.5 | 572 | 21.6 |
| புறக்கீடு செய்யப்பட்ட / காலங்கடந்த உத்தரவாதங்கள் ... ... | 63 | 3.9 | 63 | 3.9 |
| அனுமதிக்கப்பட்ட / தீர்க்கப்பட்ட கோரல்கள் | | | | |
| வெளிநிற்கும் கடன்கள் ... ... | 55 | 2.203 | 57 | 2.22 |
| அனுமதிக்கப்பட்ட பொறுப்புக்கள் ... | 55 | 1.652 | 57 | 1.665 |
| நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | | | | |
| வெளிநிற்கும் கடன்கள் ... ... | 2 | 0.22 | 2 | 0.22 |
| கோரப்பட்ட தொகை ... ... | 2 | 0.16 | 2 | 0.16 |
| வெளிநிற்கும் கடன்கள் ... ... | 86 | 2.2(எ) | 73 | 1.85(ஏ) |
| (நிலுவையில் உள்ளவை) ... ... | 78 | 1.3(எ) | 73 | 1.85(எ) |
| வெளிநிற்கும் உத்தரவாதங்கள் ... ... | 86 | 1.6(அ) | 73 | 1.38(அ) |
| பரிசீலனையின் கீழுள்ள கோரல்கள் ... | | | | |
| வெளிநிற்கும் கடன்கள் ... ... | 7 | 0.468 | 6 | 0.522 |
| கோரப்பட்ட தொகை ... ... | 7 | 0.351 | 6 | 0.391 |
| கட்டணச் சேகரிப்பு(ரூ. இ. ப.) — ... | | 0.91 | | 0.93 |

(அ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்

(ஆ) வெளிநிற்கும் 60 சதவீதமான கடன்கள் ஆகக் கூடியது ரூ. 400,000/-

(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இனையும் ரூ. 2000.000 இற்கும் ரூ. 400,000 இற்கும் இடைப்பட்ட கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ.1,200,000 இனையும் உச்ச எல்லையாகக்கொண்டு வெளிநின்ற கடன்களில் 60 சத வீதம்.

(ஈ) 1987 இறுதிவரை இவைபகிர்ந்தளிக்கப்பட்டமைபற்றி குறிப்பிடப்படாத ரூ. 2,270 இலட்சம்கொண்ட 35 கடன்களையும் உள்ளடக்கும்.

அட்டவணை 2.4

## உத்தரவாதத் திட்டங்கள் (1987—1988)
## உள்ளவாறு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்

| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்- I | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்–II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் III | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1987 | | 1988 | | 1987 | | 1988 | | 1988 | |
| எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1,668<br>1,668 | 286.1<br>157.5(ஆ) | 1,668<br>1,668 | 286.1<br>157.5(ஆ) | 2,182(உ)<br>2,182 | 1,148.06<br>593.07<br>(இ) | (ஊ)<br>2,510<br>2,510 | 1,370.74<br>702.29<br>(இ) | 263(எ)<br>263 | 155.0<br>110.3(ஈ) |
| 1,003 | 112.3 | 1035 | 119.3 | 67 | 11.28 | 70 | 11.90 | — | — |
| 48 | 12.8 | 48 | 12.8 | 62 | 35.87 | 109 | 56.83 | 2 | 0.13 |
| 150<br>150 | 19.143<br>11.486 | 212(ஐ)<br>212(ஐ) | 28.12<br>16.098 | 7<br>7 | 2.055<br>1.233 | 15(ஒ)<br>15(ஒ) | 2.968<br>1.801 | —<br>— | —<br>— |
| 15<br>15 | 4.98<br>2.99 | 16<br>16 | 5.05<br>3.03 | 4<br>4 | 0.17<br>0.10 | 4<br>4 | 0.17<br>0.10 | —<br>— | —<br>— |
| 452<br>354<br>452 | 63.9(ஏ)<br>48.7(ஏ)<br>36.8(எ) | 357<br>288<br>357 | 48.17(ஏ)<br>41.46(ஏ)<br>27.85(ஆ) | 1692<br>327<br>1,692 | 687.22(ஏ)<br>122.05(ஏ)<br>375.41(இ) | 2,197<br>478<br>2,197 | 948.2(எ)<br>192.0(ஏ)<br>511.92<br>(இ) | 123<br>இல்லை<br>123 | 46.92(ஏ)<br>இல்லை<br>36.49 (ஈ) |
| 89<br>89 | 16.966<br>10.179 | 45<br>45 | 13.0<br>7.8 | 23<br>23 | 8.66<br>5.20 | 50<br>50 | 24.4<br>14.6 | —<br>— | —<br>— |
| | 10.60 | | 11.28 | | 8.08 | | 13.17 | | 0.13 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஊ) 1988 இறுதிவரை இவை பகிர்ந்தளிக்கப்படவில்லையென குறிப்பிடப்பட்ட ரூ. 782 இலட்சத்தினைக் கொண்ட 115 கடன்களையும் உள்ளடக்கும்.

(எ) 1988 இறுதிவரை இவை பகிர்ந்தளிக்கப்படவில்லையென குறிப்பிடப்பட்ட ரூ. 1,082 இலட்சத்தினைக் கொண்ட 138 கடன்களையும் உள்ளடக்கும்.

(ஏ) மீளப்பெறப்பட்ட தவணைப்பணம் நீங்கலாக.

(ஐ) 14 கோரல்களையும் உள்ளடக்கும். இதன் கீழ் ரூ. 774,000 தொகை கொண்ட 50 சதவீதமான மத்திய வங்கிப் பொறுப்பு தீர்க்கப்பட்டுள்ளது.

(ஒ) 1 கோரலை உள்ளடக்கும். இதன் கீழ் ரூ. 135,000 தொகை கொண்ட 50 சதவீதமான மத்திய வங்கிப் பொறுப்பு தீர்க்கப்பட்டுள்ளது.

**சிறிய, நடுத்தரக்கைத்தொழில் திட்டம் – I**

சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 1 இன் கீழ் மொத்தம் 1,668 கொடுகடன் உத்தரவாதங்கள் வழங்கப்பட்டதுடன் 1988 இறுதியில் 1,035 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டதோடு 357 உத்தரவாதங்கள் வெளிநிற்பனவாகவும் விளங்கின. ஆண்டு முடிவில் 212 கோரல்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் பொறுப்புக்கள் ரூ. 160 இலட்சமாக விளங்கியதுடன் சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் ரூ. 110 இலட்சமாக விளங்கின.

**சிறிய, நடுத்தரக்கைத்தொழில் திட்டம் – II**

1982–87 காலப்பகுதியில் இத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களின் மொத்த எண்ணிக்கை 2,510 ஆகும். 1988 இறுதியில் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்களின் எண்ணிக்கை புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலம் முடிவடைந்த உத்தரவாதங்கள் 70 ஆகவும் விளங்கின. இதே கால முடிவில் 15 உத்தரவாதங்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்பு ரூ. 18 இலட்சமாக விளங்கியதுடன் ரூ. 130 இலட்சம் கட்டணமாகப் பெறப்பட்டது.

**சிறிய, நடுத்தரக்கைத்தொழில் திட்டம் – III**

1988 ஏப்பிறலிலிருந்து சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 111 தொழிற்பாட்டிற்கு வந்தது. முன்னைய இரு திட்டங்களைப் போலல்லாது சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 111 பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினாலும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் கூட்டாக நிதியிடப்படுகிறது. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு ஐ.அ. டொலர் 200 இலட்சத்திற்குச் சமனான சி.எ.உ. 155 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி ஐ.அ. டொலர் 150 இலட்சத்தை வழங்கியுள்ளது. தேசிய அபிவிருத்தி வங்கி நிறைவேற்று உயர்தர முகவர் நிலையமாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் இது பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களை மீள் நிதியிடுவதற்காக இலங்கை அரசிடமிருந்து ஐ.அ. டொலர் 295 இலட்சத்திற்குச் சமனான தொகையை ரூபா நிதியாகப் பெறும். எஞ்சிய ஐ.அ. டொலர் 55 இலட்சம் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கான தொழில்நுட்ப உதவிக்கானதாகும். பின்வரும் மாற்றங்களைத் தவிர சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 111 பெருமளவுக்குச் சிறிய நடுத்தரக் கைத்தொழில் 1 ஐயும், 11 ஐயும் ஒத்துள்ளது.

சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 111 இன் கீழ்ச் சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டத்திற்கான பங்குடைமைப் பங்களிப்பு சிறிய நடுத்தரக் கைத்தொழில் 11 இன் கீழான 20 சதவீதத் தேவையுடன் ஒப்பிடுகையில் செயற்றிட்ட மூலதனத்தில் 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே தேசிய அபிவிருத்தி வங்கியின் மீள் நிதியிடலின் அனுமதிக்கத்தக்க ஆகக்கூடிய கடனின் அளவு 80 சதவீதத்திலிருந்து 75 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. ஆகக்கூடிய துணைக் கடன்கள் ரூ. 40 இலட்சமாக மாறாதிருந்ததுடன் விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் கீழ் ரூ. 40 இலட்சத்திற்கு மேலான கடன்களை வழங்குவதைக் கவனத்திலெடுப்பதற்கும் ஒழுங்குகள் உள்ளன. சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 1, 11 இன் கீழான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களுக்கான

உத்தரவாதத்தின் அளவானது வழங்கப்பட்ட கடனின் 60 சதவீதம் அல்லது செலுத்தப்படவேண்டிய வட்டியையும் ஏனைய வங்கிக் கட்டணங்களையும் உள்ளடக்கிய செலுத்தத் தவறிய தொகை இவற்றுள் எது குறைவானதோ அதுவாகவும் முறையே ரூ. 400,000, ரூ. 12 இலட்சங் கொண்ட அதிகூடிய எல்லைக்கு அமைந்ததாகவும் விளங்கியது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் 111 இன் கீழ் மும்முனைக் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் ஒன்று பின்வரும் விதத்தில் வேறுபட்ட கடன் அளவுகளுக்கு மாறத்தக்க உத்தரவாத அளவுகளுடன் ஒவ்வொரு செயற்றிட்டத்திற்கும் அதிகூடிய காப்புத் தொகை ரூ. 16 இலட்சம் என்ற நியதிக்கமைய அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

| துணைக்கடன் | உத்தரவாதத்தின் அளவு (சதவீதம்) |
|---|---|
| 1–2,000,000 | 80 |
| 2,000,001–3,000,000 | 60 |
| 3,000,001–4,000,000 | 40 |

சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 111 இன் கீழான மத்திய வங்கியின் உத்தரவாதப் பொறுப்பு செலுத்தத் தவறிய முதல் தொகையின் அளவிற்கு வரையறுக்கப்பட்டுள்ள வேளையில் சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 1, 11 கீழ் உத்தரவாதப் பொறுப்பு முதல் தொகையையும் செலுத்தவேண்டிய வட்டி மற்றும் ஏனைய வங்கிக் கட்டணங்கள் போன்ற ஏனைய கட்டணங்களையும் உள்ளடக்கியுள்ளது.

சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 111 இன் கீழ் 1988 திசெம்பர் இறுதிவரை வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 263 ஆக விளங்கி ரூ. 1,550 இலட்சத்திற்கு வகை கூறியதுடன் இதில் மத்திய வங்கியால் உத்தரவாதமிடப்பட்ட பெறுமதி ரூ. 1,100 இலட்சமாக விளங்கியது. சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் 11, 111 இன் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு அட்டவணை 2.5 இல் தரப்பட்டுள்ளது.

### செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதித்தலும்

தேவையான வேளையில் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதனை செய்வதும் 1988 இல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. எனினும் இவ்வாண்டில் இறுதிப் பகுதியில் நாட்டில் நிலவிய அமைதியற்ற நிலைமையினால் பின்தொடரும் வேலைகளில் சிறு பின்னடைவு ஏற்பட்டது. 1988 இல் 109 செயற்றிட்டங்கள் பரிசோதிக்கப்பட்ட வேளையில் இச்செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, கேகாலை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அமைந்திருந்தன.

## அட்டவணை 2.5

### கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு—சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II, III
### 1988 டிசெம்பர் 31 இல் உள்ளபடி

( ரூ. '000 )

| திட்டம் / கைத்தொழில் | சிறியநடுத்தரக்கைத்தொழில் II, III 1982—1988 | | | சிறியநடுத்தரக்கைத்தொழில் II 1988 | | | சிறியநடுத்தரக்கைத்தொழில் III 1988 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | கடன் தொகை | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | எண்ணிக்கை | கடன் தொகை | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | எண்ணிக்கை | கடன் தொகை | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை |
| உணவு பதப்படுத்தல் ... | 892 | 485,700 | 254,350 | 123 | 80,484 | 40,902 | 55 | 33,262 | 23,537 |
| ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் ... | 54 | 24,038 | 12,546 | 04 | 4,120 | 1,512 | 05 | 1,015 | 812 |
| இறப்பர் உற்பத்திகள் ... | 80 | 62,446 | 32,403 | 05 | 5,200 | 2,220 | 08 | 7,575 | 5,260 |
| உலோக உற்பத்திகள் ... | 270 | 122,249 | 64,261 | 23 | 19,054 | 8,611 | 31 | 9,414 | 7,531 |
| கட்டடவாக்கப் பொருட்கள் ... | 181 | 99,271 | 57,589 | 18 | 6,457 | 3,874 | 21 | 12,105 | 9,684 |
| கட்டடவாக்க ஒப்பந்தம் ... | 29 | 33,850 | 17,580 | 07 | 6,800 | 3,940 | 03 | 1,650 | 1,320 |
| மர உற்பத்திகள் ... | 188 | 69,375 | 41,604 | 15 | 4,551 | 2,731 | 23 | 14,150 | 10,624 |
| ஆடைகள் ... | 148 | 80,565 | 41,529 | 18 | 22,035 | 9,461 | 19 | 10,376 | 6,701 |
| புடவைகள் | 59 | 52,155 | 26,627 | 05 | 6,162 | 2,497 | 04 | 6,380 | 3,504 |
| தொழிற்கூடத்திருத்தல் ... | 114 | 47,284 | 28,164 | 16 | 8,051 | 3,630 | 13 | 7,107 | 5,685 |
| பல்வகை ... | 758 | 451,915 | 236,964 | 94 | 62,919 | 30,831 | 81 | 51,922 | 35,677 |
| மொத்தம் ... | 2,773 | 1,528,848 | 813,617 | 328 | 225,833 | 110,209 | 263 | 154,956 | 110,335 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

### சிறிய நடுத்தர கைத்தொழில் நிதியங்கள்

1988 யூலையிலிருந்து மத்திய வங்கி அதன் சிறிய நடுத்தரக் கைத்தொழில் நிதியங்களை முதலாந்தர, இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தைகளில் முதலிடத் தொடங்கியது. 1988 இறுதியில் வெளிநிற்கும் இம்முதலீடுகளின் பெறுமதி ரூ. 1,100 இலட்சமாகும். இவ்வாண்டில் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த வருவாய் ரூ. 34 இலட்சமாக விளங்கியது.

### தொழில் முயற்சி அபிவிருத்தி

1987 இல் தொடங்கிய மத்திய வங்கியின் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் அமைதியற்ற நிலைமைகளினால் 1988 இல் இடைநிறுத்தப்பட்டது. சில வேளைகளில் மாகாண நகரங்களுக்குப் பயணம் செய்வதற்காகச் சில சிறப்பு முகவர் நிலையங்களிலிருந்து எடுக்கப்பட்ட மூலவள ஆளணியினரின் விருப்பமின்மையால் அட்டவணையிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் இறுதியில் இல்லாமல் செய்யப்பட்டது. இவ்வனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் 1989 இல் செயற்படுத்தப்படுவதற்காக மீள அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

## கிராமியக் கொடுகடன்

கிராமியத் துறையின் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கான கடன் வழங்கல், ஒழுங்குபடுத்தல் என்பனவற்றின் அணுகுமுறையில் ஒத்த அமைப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் கிராமியக் கொடுகடன்மீது கொள்கை வழிமுறையினை உருவாக்குவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் மத்திய வங்கி முக்கிய பங்கினை வகிக்கின்றது. வங்கி வர்த்தக வங்கிகள் மீது செல்வாக்கினைச் செலுத்துவதன் மூலம் மீள் நிதியிடல், கொடுகடன் உத்தரவாதம் வழங்கல் என்பவற்றினூடாகக் கிராமியத்துறைக்குக் கொடுகடன் வழங்குவதனை ஊக்குவிக்க விளைகின்றது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வங்கிகளுக்கு நெல், துணை உணவுப் பயிர்கள் என்பவற்றின் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கு எதிராகக் குறுங்கால மீள் நிதியிடல் வசதி வழங்கப்படுகின்றது. 1988 சிறுபோகத்தில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை 1987 சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1,240 இலட்சத்திலிருந்து ரூ. 1,050 இலட்சத்திற்கு 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1987/88 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் முந்திய பருவகாலத்தினைவிட 5 சத வீதத்தினால் சிறிதளவு அதிகரித்து ரூ. 2,750 இலட்சமாக விளங்கின. 1988 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது நாட்டில் நிலவிய அமைதியற்ற அரசியல் நிலைமைகளினதும், நீர்ப்பாசனத்திற்குட்பட்ட பிரதேசங்களின் கீழான நிலங்களில் நீர் கிடைக்காமையினதும் இணைந்த விளைவாகும்.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ''மீள் சுழல்வடையும் வசதி'' தவிர்க்கமுடியாமல் கடன் செலுத்தத் தவறியோருக்கு வழங்கப்பட்ட கடன்களை மீள் அட்டவணைப்படுத்துவதற்கு வங்கிகளை இயலச் செய்தது. மீள் அட்டவணையிடப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் அளவும் 1986 சிறுபோகத்தின் ரூ. 50 இலட்சம் பெறுமதியான

745 கடன்களுடன் ஒப்பிடுகையில் 1987 சிறுபோகத்தில் முறையே ரூ. 10 இலட்சங் கொண்ட 314 கடன்களாக விளங்கியது. 1987/88 பெரும்போகத்தில் அட்டவணையிடப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் பெறுமதியும் முறையே 2,228 ஆகவும் ரூ. 110 இலட்சமாகவும் விளங்கி ரூ. 70 இலட்சம் பெறுமதியான 1,920 கடன்கள் அட்டவணையிடப்பட்ட முந்திய 1986/87 பெரும்போகத்தினை விடக் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டக் கடன்களை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாத வசதியின்கீழ் 1987 சிறுபோகத்தில் வங்கியினால் கோரப்பட்ட மொத்த இழப்பீடுகள் ரூ. 23 இலட்சமாக அமைந்தன. இதில் ரூ. 11 இலட்சம் கோரலின் முதல் தவணைக் கட்டணமாக வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டது.

1988 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் நிதி அளவுகள் தொடர்பாகச் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. வளமாக்கி, கிருமிநாசினிகள், விதைகளினதும் கூலிகளினதும் செலவு என்பன வற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக 1988 ஒத்தோபரில் நிதியிடலின் அளவுகள் 50 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டன. இது 1988/89 பெரும்போகத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். திருத்தியமைக்கப்பட்ட அளவுகள் பதினொரு பயிர்களை உள்ளடக்கும். அவையாவன:—நெல், உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், பெரிய வெங்காயம், பயறு, உழுந்து, தட்டைப் பயறு, நிலக்கடலை, சோளம், சோயா அவரை. இவ் உள்ளீடுகளின் செலவு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டபோதிலும் ஒத்த தன்மையை உறுதிப் படுத்தும்பொருட்டு மாவட்டச் சராசரிகளின் அடிப்படையில் அளவுகள் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

நடுத்தர, நீண்ட காலக் கடன் வழங்கலைப் பொறுத்தவரை 1988 இறுதியில் கடன் வழங்கும் வங்கிகளினால் பயன்படுத்தப்பட்ட மீள் நிதியிடலின் அளவு ரூ. 2,940 இலட்சமாக விளங்கியது. 1988 இல் இருபத்திமூன்று நடுத்தர, நீண்ட காலக் கொடுகடன் திட்டங்கள் தொழிற்பாட்டிலிருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் புதிய திட்டங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை. பயிரிடுகைக்கு முன்னான விதை உருளைக்கிழங்குகளின் சிறு களஞ்சிய கட்டடவாக்கத்திற்கான கொடுகடன் திட்டம், விக்டோரியா செயற்றிட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்த வர்த்தகருக்கான கொடுகடன் திட்டம், இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத் தாபனத்தின் சோயா அவரை, சோளம் ஏனைய பயறு வகைகள் என்பவற்றின் கொள்வனவினை நிதியிடுவதற்கான (குறுங்கால) சந்தைப்படுத்தல் கடன் திட்டம் என்பன ஒழிக்கப்பட்டன. இறுதியான திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட வேளா ண்மையாளருக்கு ஒப்பந்த வேளாண்மையினூடாக உத்தரவாத விலையினை உறுதிப் படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. திட்டத்தின் நோக்கம் அடையப்

படாமையினுல் இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. அதேவேளை, இலங்கை/ஆசிய அபிவிருத்தி வங்கி கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது இத்திட்டத்தின் செயற்பாட்டுக் காலம் முடிவடைந்தமையினுல் நிறுத்தப்பட்டது. உணவு வேளாண்மை அமைப்பு/மாதர் பணியக செயற்றிட்டத்தின் கீழ் வருமான உருவாக்க நடவடிக்கைகளினுல் பெருந்தோட்டத்துறைப் பெண்களுக்கு உதவுவதற்கான பரீட்சார்த்த அடிப்படையில் தொழிற்படுத்தப்பட்ட சிறப்புக் கொடுகடன் திட்டமும் இதே நோக்கத்திற்காக நிறுத்தப்பட்டது. வவுனியா, மன்னர் மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் செயற்றிட்டப் பிரதேசத்தில் நிலவிய குழப்பங்கள் காரணமாகப் பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பின் ஆலோசனையின் பேரில் இடைநிறுத்தப்பட்டது.

நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை 1 இன் கீழான கொடுகடன் திட்டங்களின் செயலாற்றம் அட்டவணை 2.6 இல் தரப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக 1988 இல் பெருந்தொகையான திட்டங்களின் கீழான நிதிகளின் பகிர்ந்தளிப்பு மெதுவாகவே இருந்தது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினுல் நிருமாணிக்கப்படும் வளமாக்கிக் களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம், சுமை இழுக்கும் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுகடன் திட்டம், கரையோர பாரவலை மீன் பிடிக்கான கொடுகடன் திட்டம் என்பவற்றின் கீழ் மீள் நிதியிடல் நிதியங்களிலிருந்து எடுப்பனவு எதுவும் செய்யப்படவில்லை. மாருகக் கடன் வழங்கப்படக் கூடியதாக விருந்த பரந்த அளவு நடவடிக்கைகள் காரணமாக எல்லாச் சுயதொழில் வாய்ப்புத் திட்டங்களும் சாதகமான போக்கினைப் பதிவு செய்தன. சில திட்டங்களில் மெதுவான முன்னேற்றம் காணப்பட்டபோதிலும் நாடு முழுவதற்குமான பண்ணைப் பொறித்தொகுதிக் கடன் திட்டம், பாற்பண்ணை, கால்நடை அபிவிருத்தி, கரும்புப் பயிர்ச்செய்கை என்பனவற்றிற்கான கொடுகடன் திட்டங்கள் மீள் நிதியிடல் ஒதுக்குகளில் பெருமளவு எடுப்பனவுகளைப் பதிவு செய்தன. எனினும் பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின் கீழ்க் கரும்புப் பயிர்ச்செய்கைக்காக வெளியிலுள்ள பயிர்ச்செய்கையாளருக்கான கொடுகடன் திட்டம் மெதுவான பகிர்ந்தளிப்பினையே பதிவு செய்தது. இதற்கு இத்திட்டத்தின் கீழுள்ள நிரந்தரமான குடியேற்ற வாசிகளுக்கென இலக்கிடப்பட்ட இதேவாருன திட்டத்தினைப் போலன்றி வெளியிலுள்ள பயிர்ச்செய்கையாளர் கரும்புப் பயிர்ச்செய்கையில் முழு நேரமும் ஈடுபடாமையும் அதனுல் வங்கிகள் கரும்புப் பயிர்ச்செய்கையாளருக்குக் கடன் வழங்கத் தயங்குவதுமே காரணமாகும்.

கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியேற்றச் செயற்றிட்டத்தின் கட்டம் 11 இன் கொடுகடன் கூறிற்கான நிறைவேற்று முகவராக வங்கி தொடர்ந்து செயலாற்றியது. இதற்காக வேளாண்மையாளருக்குப் பண்ணைப் பொறித்தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய கொடுகடனை வழங்குவதில் பங்கு

## நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் வகை I இன்

| கொடுகடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் (ரூ.ப.இ.) |
|---|---|
| அ. 1986ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள் | |
| 1. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... ... | 65.00 |
| 2. கடற்றொழில் துறை வங்கி நிதியிடல் திட்டம் ... ... | 140.00 |
| 3. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 14.00 |
| 4. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00 |
| 5. மாத்தளை, புத்தளம் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் ... ... ... | 54.79 |
| 6. மாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுயதொழில் வாய்ப்புக் கிராம ஏற்புத் திட்டம்... | 18.20 |
| 7. தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 |
| 8. இலங்கை கிராமிய கொடுகடன் திட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் சுமை இழுக்கும் விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடு வதற்கான கொடுகடன் திட்டம் ... ... ... | 5.60 |
| 9. அநுராதபுர மாவட்டத்தில் கிராம ஏற்பு சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன்திட்டம்... | 12.00 |
| 10. பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 7.00 |
| 11. மாதல் மீன்பிடிக்கான கொடுகடன் திட்டம் (கரையோர பாரவலை மீன்பிடி) ... | 5.00 |
| 12. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின்கீழ் கரும்பினை பயிரிடும் குடியிருப்பாளர் களுக்கான கொடுகடன் திட்டம் ... ... | 66.00 |
| 13. செவனகல, இங்குரான, கந்தளாய் சீனி செயற்றிட்டத்தில் கரும்பினைப் பயிரிடும் சிறு வேளாண்மையாளர்களுக்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 120.60 |
| 14. நாடு முழுவதற்குமான பண்ணைப் பொறித் தொகுதிக்கடன் திட்டம் .. | 106.99 |
| 15. குருநாகல், கொழும்பு, கம்பகா மாவட்டங்களில் சின இஞ்சி, அன்னாசி, பாசன் பழங்களை பயிரிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 32.00 |
| 16. அநுராதபுரம் உலர்வலய வேளாண்மைச் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 22.30 |
| 17. இலங்கை ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 91.72 |
| 18. கண்டி, கேகாலை, மாத்தளை மாவட்டங்களிலுள்ள சுய தொழில் வாய்ப்பு மற்றும் ஏனைய நடுத்தரப்பண்ணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கான திட்டம்... | 16.00 |
| 19. பாற்பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டம் ... | 20.60 |
| 20. களுத்துறை, குருநாகல் மாவட்டங்களில் சுயதொழில் வாய்ப்பினை ஊக்குவிப் பதற்கான கொடுகடன் திட்டம் ... | 35.00 |
| 21. கிணற்று நீர்ப்பாசன நோக்கங்களுக்கு குழாய் கிணறுகளை அமைப்பதற்கான கொடுகடன் திட்டம் ... | 1.10 |
| 22. கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் ... | 50.00 |
| 23. பெல்வத்தை சீனிச் செயற்றிட்டத்தின் கீழ் கரும்புப் பயிர்ச்செய்கைக்காக வெளியி லுள்ள பயிர்ச்செய்கையாளருக்கான கொடுகடன் திட்டம். .. | 39.30 |
| மொத்தம் | 972.70 |

அட்டவணை 2.6

**கீழ் மீள் நிதியிடுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்**

| 31. 12. 88 இல் பயன்படுத்தப்பட்ட தொகை (ரூ. ப. இ.) | 31. 12. 88 இல் பயன்படுத்தப்படாத தொகை (ரூ. ப. இ.) | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பகிர்ந்தளிப்புக் காலப் பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|
| 53.31 | 11.69 | 26. 03. 79 | 11 |
| 135.42 | 4.58 | 02. 07. 79 | 9 |
| 9.14 | 4.86 | 13. 10. 80 | 1 |
| 1.28 | 40·72 | 28. 04. 81 | 7 |
| 54.79 | இல்லை | 29. 06. 81 | 8 |
| 16.59 | 1.61 | 10. 04. 81 | முடிவுறும் திகதி குறிப்பிடப்படவில்லை |
| 1.42 | 6.08 | 11. 08. 82 | 11 |
| 3.11 | 2.49 | 10. 09. 82 | 6 |
| 8.18 | 3.82 | 14. 10. 82 | 7 |
| 4.52 | 2.48 | 27. 09. 83 | 7 |
| 0.90 | 4.10 | 26. 04. 84 | 2 |
| 38.73 | 27.27 | 10. 05. 84 | 6 |
| 26.67 | 93.93 | 20. 09. 84 | 5 |
| 73.12 | 33.87 | 26. 03. 85 | 3 |
| 4.04 | 27.96 | 27. 06. 85 | 4 |
| 2.96 | 19.34 | 02. 07. 85 | 4 |
| 3.84 | 87.88 | 01. 03. 86 | 5 |
| 6.39 | 9.61 | 01. 03. 86 | 6 |
| 4.15 | 16.45 | 16. 04. 86 | 5 |
| 20.08 | 14.92 | 15. 05. 86 | 5 |
| 0.17 | 0.93 | 08. 09. 86 | 2 |
| 2.12 | 47.88 | 15. 01. 87 | 6 |
| 2.75 | 36.55 | 07. 08. 87 | 7 |
| 473.68 | 499.02 | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பற்றும் கொடுகடன் நிறுவனங்களின் நடவடிக்கைகளை வங்கி ஒன்றிணைத்து வந்தது. இது தவிர பின்வரும் செயற்றிட்டங்கள் தொடர்பான கொடுகடன் கூறுகளுக்கான நிறைவேற்று முகவராகவும் வங்கி பணிக்கப்பட்டது:—

(1) ஆசிய அபிவிருத்தி வங்கியினுல் நிதியிடப்பட்ட மத்திய பிரதேச நீண்ட காலப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(2) ஆசிய அபிவிருத்தி வங்கியினுல் நிதியிடப்பட்ட இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம்.

(3) ஆசிய அபிவிருத்தி வங்கியினுல் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்.

மேற்கூறப்பட்ட மத்திய பிரதேச நீண்டகாலப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான கடன் ஒப்பந்தம் இலங்கை அரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது. இக் கடன் 1989 மாச்சிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். மேற்கூறப்பட்ட மற்றைய இரு செயற்றிட்டங்களையும் பொறுத்தவரை அரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மிடையே பேச்சு வார்த்தைகள் முற்றுப்பெற்றதுடன் கடன் ஒப்பந்தங்கள் 1989 இன் முதற் காற்பகுதியில் கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப் பட்டது.

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னுட்டு நிதியம், கனடிய பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பு என்பவற்றினுல் நிதியிடப்பட்ட ''சிறு வேளாண்மையாளர் நிலமற்றோருக்கான கொடுகடன்'' செயற்றிட்டத்தின் கீழ் ''வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு வங்கியிடம் ஒப்புவிக்கப் பட்டது. இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான கடன் ஒப்பந்தம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னுட்டு நிதியத்திற்கும் இலங்கை அரசிற்கு மிடையே 1988 ஏப்பிறல் 20 இல் கைச்சாத்திடப்பட்டது.

இக்கடன் 1989 இன் முதற் காலாண்டில் நடைமுறைக்கு வருமென எதிர் பார்க்கப்படுவதுடன் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து ஆறு ஆண்டுக் காலத் திற்கு நடைமுறையிலிருக்கும். இச்செயற்றிட்டம் கண்டி, புத்தளம், காலி, மாத் தறை ஆகிய நான்கு மாவட்டங்களில் தொழிற்படுத்தப்படும். கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களினது செயற்றிட்டங்களின் கடன் கூறுகளை வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னுட்டு நிதியம் வழங்கும் வேளையில் காலி, மாத்தறை மாவட்டச் செயற்றிட்டங்களின் கடன் கூறு கனடிய பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பினுல் நிதியிடப்படும். இந்நான்கு மாவட்டங்களிலும் நிறுவன ரீதியான மூலங்களிலிருந்து கடன்களைப் பெற முடியாத ஏறத்தாள 32 வறிய குடியிருப் பாளர்களுக்குக் குறுகிய, நடுத்தரக் காலக் கடன்களை வழங்குவதன் மூலம் வருவாய் வழங்கும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதை இயலச் செய்து அவர்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதை இச்செயற்றிட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், செயற்றிட்ட மாவட்ட அலுவலகங்கள், பல் தேசிய பன்னுட்டு பங்குபற்றும் முகவர் நிலையங்கள் போன்ற வற்றினுல் இனங் காணப்பட்ட தகுதியான கடன்படுநர்களுக்குக் கொடுகடன் வழங்கப்படும்.

இச்செயற்றிட்டத்திற்குத் தனியான பல பண்புகள் உள்ளன. முதலாவதாக இக்கொடுகடன் ரூ. 2,400 இற்குக் குறைவான தேறிய குடியிருப்பாளர் ஆண்டு வருமானத்தையுடைய உண்மையான வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சிறிய காணியற்ற வேளாண்மையாளர்களையே இலக்காகக் கொண்டுள்ளது. இரண்டாவது இக்கடன்படுநர்கள் ஒருவருக்கொருவர் இணைந்து செயற்படும் திறன் குறைந்தவர்களாக உள்ளதால் பிணையற்ற கொடுகடன் வங்காள தேசத்தின் கிராமின் வங்கியின் வழிமுறைகளைப் போல் தொடக்கத்தில் தொகுதி அடிப்படையில் ஆண்டுக்கு 16 சதவீதக் கடன் வழங்கும் வீதத்தில் வழங்கப்படும். (மத்திய வங்கி மீள் நிதியிடலினால் அடக்கப்பட்ட கடன்கள் என இதுவரை வகைப்படுத்தப்பட்ட ஆண்டுக்கு 12½ சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது) மூன்றாவது பங்கு பற்றும் முகவர் நிலையங்கள் இவ் 'உயர் இடர்பாடு' வகைக் கடன்படுநர்களிடமிருந்து கடன்களுக்கு ஆதரவு திரட்டும்போது 'பாதுகாப்பற்ற வங்கியாளர்களாக' செயற்பட வேண்டும். நான்காவது பெண்களுக்கு வழங்கப்படும் கொடுகடன் விரைவாக முழுக் குடும்பத்திற்கும் நன்மையளிக்கும் என்பதை உணர்ந்துள்ளதால் இச்செயற்றிட்டத்தில் பங்குபெறுவதற்குப் பெண்களுக்குச் சம சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். எனவே பெண்கள் குழுக்களுக்கும் பெண்களையே தலைவர்களாகக் கொண்ட குடியிருப்பாளர்களுக்கும் கொடுகடன் வழங்குவதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இறுதியாகக் காணி மீதான கடுமையான தாக்கங்களினால் உற்பத்தி அடிப்படையைப் பன்முகப்படுத்த வேண்டியதன் அவசியத்தினாலும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட புதிய குறைந்த செலவுள்ள பணிகள் சார்ந்த தொழில் முயற்சிகளுக்குக் கொடுகடன் வழங்கப்படும். 1988 இன் பின்னரைப் பகுதியில் மத்திய வங்கி பங்கு பற்றும் அமைப்புக்களான சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்திப் பணி, பெண்கள் பணியகம், லங்கா மகில சமிதி, சிக்கன கொடுகடன், கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு என்பனவற்றுடன் பங்குபற்றும் உடன்படிக்கைகளில் கையொப்பமிடுவதற்கும் புத்தளம், கண்டி, பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுடன் துணை உடன்படிக்கைகளைக் கையொப்பமிடுவதற்குமான நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுத்தது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1988 இன் இறுதிக் காலாண்டில், நுவரெலியா, மொனராகல மாவட்டங்களில் இரு புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டதுடன் 1988 இறுதியில் தொழிற்பாட்டிலிருந்த பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 11 இனை அடைந்தது. இவ்வாண்டில் 19 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டதுடன், 1988 இன் இறுதியில் 11 மாவட்டங்களில் 80 கிளைகள் பரந்து காணப்பட்டன. நாட்டில் உள்நாட்டுக் குழப்பங்கள் காணப்பட்டபோதும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தமது பணிகளை, குறிப்பாக வறிய கிராம மக்களுக்கான பணிகளை விரிவாக்கக் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டன.

அட்டவணை 2.7

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை அமைப்பு

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவிய திகதி | தலைமை அலுவலகம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | 1988 இறுதியில் உள்ள மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 | 1986 | 1987 | 1988 | |
| களுத்துறை | 13.07.85 | புளத்சிங்கள | 04 | 03 | 04 | 01 | 12 |
| மாத்தறை | 28.07.85 | எட்டியான | 05 | 02 | — | 01 | 08 |
| குருநாகல் | 10.08.85 | குளியாப்பிட்டி | 06 | 04 | 02 | 01 | 13 |
| அநுராதபுரம் | 12.08.85 | மிகிந்தல | 02 | 04 | 01 | — | 07 |
| அம்பலாந்தோட்டை | 13.12.86 | அம்பலாந்தோட்டை | — | 02 | 02 | 02 | 06 |
| கேகாலை | 08.02.87 | கெட்டிமுல்லை | — | — | 08 | 01 | 09 |
| புத்தளம் | 11.07.87 | சிலாபம் | — | — | 05 | 01 | 06 |
| காலி | 17.08.87 | எல்பிட்டிய | — | — | 01 | 07 | 08 |
| கண்டி | 03.10.87 | கம்பளை | — | — | 06 | 03 | 09 |
| நுவரெலியா | 10.10.88 | நுவரெலியா | — | — | — | 01 | 01 |
| மொனராகல | 11.10.88 | பதுளை | — | — | — | 01 | 01 |
| | மொத்தம் | | 17 | 15 | 29 | 19 | 80 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1988 இல் வைப்புக்களைத் திரட்டுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. அனைத்து பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினாலும் திரட்டப்பட்ட வைப்புக்களின் மொத்தத் தொகை 1987 இறுதியில் 87,978 கணக்குகளின் பேரில் ரூ. 530 இலட்சத்திலிருந்து 1988 இறுதியில் 144,516 கணக்குகளின் பேரில் ரூ. 1,030 இலட்சங்களுக்கு ஏறத்தாள இரண்டு மடங்காக அதிகரித்தது. மொத்த வைப்புக்களில் ஏறத்தாள 87 சதவீதத்திற்குச் சாதாரண சேமிப்புக் கணக்குகள் வகை கூறியவிடத்து மொத்த வைப்புக்களில் நிலையான வைப்புக்களின் பங்கு ஏறத்தாள 13 சதவீதமாக மட்டும் காணப்பட்டது. இது பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கிராமப் புறங்களில் சார்பு ரீதியில் வறிய மக்களுக்கு முக்கியமாகப் பணியாற்றுவதனை எடுத்துக் காட்டுகிறது. சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள் இரண்டினையும் ஒன்றாகக் கணக்கிலெடுக்கையில் கணக்கொன்றிற்கான வைப்புக்களின் சராசரி பெறுமதி 1987 இல் ரூ. 602 இலிருந்து 1988 இல் ரூ. 716 இற்கு உயர்வடைந்துள்ளமையை எண் தொகைகள் காட்டுகின்றன. வைப்புத் திரட்டலின் மீதான விபரமான தரவுகள் அட்டவணை 2.8 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.8

## வைப்புக்களின் திரட்டலின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு 1987, 1988 முடிவில்

(தொகை ரூ. '000)

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | சேமிப்பு வைப்புக்கள் | | | | நிலையான வைப்புக்கள் | | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1987 | | 1988 | | 1987 | | 1988 | | 1987 | | 1988 | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை ... | 20,563 | 8,496 | 27,949 | 14,038 | 133 | 3,532 | 115 | 1,681 | 20,696 | 12,028 | 28,064 | 15,719 |
| மாத்தறை ... | 16,657 | 12,174 | 21,574 | 20,636 | 203 | 1,898 | 251 | 2,680 | 16,860 | 14,072 | 21,825 | 23,316 |
| குருநாகல் | 20,042 | 9,399 | 23,951 | 15,444 | 150 | 2,000 | 232 | 2,585 | 20,192 | 11,399 | 24,183 | 18,029 |
| அநுராதபுரம் ... | 8,483 | 3,802 | 16,561 | 7,080 | 11 | 611 | 27 | 958 | 8,494 | 4,413 | 16,588 | 8,038 |
| அம்பாந்தோட்டை | 5,839 | 3,239 | 10,758 | 7,260 | 75 | 462 | 137 | 1,316 | 5,914 | 3,701 | 10,895 | 8,576 |
| கேகாலை ... | 8,888 | 3,113 | 17,562 | 8,450 | 47 | 421 | 116 | 1,654 | 8,935 | 3,534 | 17,678 | 10,104 |
| புத்தளம் ... | 3,091 | 1,706 | 10,289 | 6,223 | 15 | 71 | 40 | 366 | 3,106 | 1,777 | 10,329 | 6,589 |
| காலி ... | 1,230 | 941 | 5,881 | 5,852 | 19 | 136 | 158 | 1,662 | 1,249 | 1,077 | 6,039 | 7,514 |
| கண்டி ... | 2,519 | 886 | 8,071 | 4,270 | 13 | 88 | 65 | 1,004 | 2,532 | 974 | 8,136 | 5,274 |
| நுவரெலியா | — | — | 544 | 193 | — | — | 01 | 25 | — | — | 545 | 218 |
| மொனராகலை | — | — | 234 | 75 | — | — | — | — | — | — | 234 | 75 |
| மொத்தம் | 87,312 | 43,756 | 143,374 | 89,521 | 666 | 9,219 | 1,142 | 13,931 | 87,978 | 52,975 | 144,516 | 103,452 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1988 ஆம் ஆண்டு கடன் தொழிற்பாடுகளும் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைக் காட்டியது. பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1987 இன் 13,801 இலிருந்து 1988 இல் 17,127 இற்கு 24 சதவீதத்தினுல் அதிகரித்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் தொகை 1987 இன் ரூ. 960 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 1,090 இலட்சத்திற்கு உயர்வடைந்தமை கடனின் சராசரி அளவு 1987 இல் ரூ. 6,966 இலிருந்து 1988 இல் ரூ. 6,348 இற்கு வீழ்ச்சியுற்றமையை எடுத்துக் காட்டியது. சராசரிக் கடன் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி, முக்கியமாக வறிய மக்களுக்குத் தேவையாக இருந்த சார்புரீதியில் சிறிய கடன்களுக்குப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பெருமளவு முன்னுரிமையளித்துள்ளமையைப் பிரதிபலிப்பதாகக் கருத இடமுண்டு. ஒவ்வொரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியினுலும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் மீதான தெரிந்தெடுக்கப்பட்ட விபரங்களை அட்டவணை 2.9 தருகின்றது. 1988 இல் கடன்களின் நோக்க அடிப்படையிலான பகிர்ந்தளிப்பு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் வேளாண்மைக்கு உயர்ந்த முன்னுரிமை அளித்துள்ளமையைக் காட்டுகின்றது. அட்டவணை 2.10 இல் காட்டப்பட்டவாறு கடன்களின் மொத்த அளவில் ஏறத்தாள 44 சதவீதம் வேளாண்மை நோக்கங்களுக்கானதாக இருந்தது. வேளாண்மைக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்த அளவு 1987 இன் ரூ. 350 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 470 இலட்சத்திற்கு 36 சதவீதத்தினுல்

### அட்டவணை 2.9

### 1985, 1986, 1987 இலும் 1988 இலும் வழங்கப்பட்ட கடன்களின் மாவட்ட அடிப்படையிலான பகுப்பாய்வு

(ரூ. '000)

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர் | 1985, 1986 காலப் பகுதியில் | | 1987 காலப் பகுதியில் | | 1988 காலப் பகுதியில் | | மொத்தம் (1985–88) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| களுத்துறை | 2,134 | 6,894 | 2,700 | 12,787 | 2,492 | 19,982 | 7,326 | 39,663 |
| மாத்தறை | 3,906 | 13,389 | 4,977 | 20,166 | 4,257 | 22,555 | 13,140 | 56,110 |
| குருநாகல் | 1,894 | 15,779 | 1,347 | 11,551 | 1,483 | 11,588 | 4,724 | 38,918 |
| அநுராதபுரம் | 1,413 | 34,001 | 1,965 | 38,334 | 1,505 | 9,107 | 4,883 | 81,442 |
| அம்பாந்தோட்டை | — | — | 1,609 | 5,752 | 3,053 | 15,120 | 4,662 | 20,872 |
| கேகாலை | — | — | 900 | 5,929 | 1,920 | 14,440 | 2,820 | 20,369 |
| புத்தளம் | — | — | 109 | 828 | 1,051 | 7,981 | 1,160 | 8,809 |
| காலி | — | — | 80 | 509 | 508 | 3,204 | 588 | 3,713 |
| கண்டி | — | — | 114 | 280 | 857 | 4,736 | 971 | 5,016 |
| நுவரெலியா | — | — | — | — | 01 | 06 | 01 | 06 |
| மொனராகலை | — | — | — | — | — | — | — | — |
| மொத்தம் | 9,347 | 70,063 | 13,801 | 96,136 | 17,127 | 108,719 | 40,275 | 274,918 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 2.10

### 1985—1986, 1987 இலும் 1988 இலும் வழங்கப்பட்ட கடன்களின் நோக்க அடிப்படையிலான ஒப்பீடு

| நோக்கம் | 1985—1986 | | | 1987 | | | 1988 | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் | எண்ணிக்கை | தொகை ரூ. '000 | சதவீதம் |
| வேளாண்மை ... | 4,629 | 25,415 | 36 | 6,816 | 34,950 | 36 | 8,649 | 47,272 | 44 | 20,094 | 107,637 | 39 |
| மீன்பிடி ... | — | — | — | — | — | — | 75 | 3,727 | 04 | 75 | 3,727 | 01 |
| கால்நடை ... | 662 | 5,459 | 08 | 1,000 | 6,353 | 07 | 873 | 5,696 | 05 | 2,535 | 17,508 | 07 |
| சிறு கைத்தொழில்கள் ... | 1,632 | 9,303 | 13 | 2,429 | 15,229 | 16 | 2,905 | 19,913 | 18 | 6,966 | 44,445 | 16 |
| வர்த்தகமும் வியாபாரமும் ... | 1,681 | 25,951 | 37 | 2,228 | 33,454 | 35 | 2,520 | 19,955 | 18 | 6,429 | 79,360 | 29 |
| ஏனையவை ... | 743 | 3,935 | 06 | 1,328 | 6,150 | 06 | 2,105 | 12,156 | 11 | 4,176 | 22,241 | 08 |
| மொத்தம் ... | 9,347 | 70,063 | 100 | 13,801 | 96,136 | 100 | 17,127 | 108,719 | 100 | 40,275 | 274,918 | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. கடன்களின் மொத்த அளவு ஒவ்வொன்றிலும் 18 சதவீதம் சிறு கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் வியாபார நோக்கங்களுக்கானவையாக இருந்தமை, கிராமியத்துறைக்கு கொடுகடன் பாய்ச்சலைப் பன்முகப்படுத்துவதில் இவ் வங்கிகள் மேற்கொண்ட ஒருங்கிணைந்த முயற்சியையும் இதனுல் கிராமியப் பொருளாதார நடவடிக்கைகளின் பன்முகப்படுத்தலை ஊக்குவிப்பதனையும் காட்டுகின்றது.

## கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி

வங்கித் தொழில்துறையில் மனிதவள அபிவிருத்திக்கான உயர்வடையும் கேள்வியை ஈடுசெய்யும் வகையில் மத்திய வங்கியின் கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி வங்கித்தொழில் அலுவலர்களுக்கு அவசியமான பயிற்சியை வழங்குகிறது. பங்குபற்றுநர்களுக்குப் புதிய அறிவைப் பகிர்ந்து அதன் மூலம் எதிர்காலத்தில் சிறப்பாகக் கடமையாற்ற அவர்களை இயலச் செய்வதற்கான திறன்களை உயர்த்துவதனை இப்பயிற்சி நெறிகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

1988 இல் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 34 பயிற்சி நெறிகளையும், ஆய்வரங்குகளையும் ஒழுங்குசெய்து நடாத்தியது. இதில் 1,277 பேர் பங்குபற்றினர். இப்பங்குபற்றுநர்களில் 826 பேர் வர்த்தக வங்கிகளிலிருந்தும், 82 பேர் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியிலிருந்தும், 240 பேர் மத்திய வங்கியிலிருந்தும் பங்குபற்றினர். பெரும்பாலும் எல்லாப் பங்குபற்றுநர்களும் வங்கித்தொழில்துறையில் நடுத்தர அல்லது கீழ்மட்ட முகாமைத்துவ நிலையில் உள்ளவர்களாக விளங்கினர்.

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினுல் வழங்கப்பட்ட பயிற்சியானது முகாமைத்துவ அபிவிருத்தி, கணனிப் பயன்பாடு, தவணைக் கொள்வனவும் குத்தகை நிதியிடலும் வர்த்தக வங்கித்தொழில், கிராமிய வங்கித் தொழில், தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் விலங்கு வளர்த்தலை உள்ளடக்கிய சிறிய அளவு வேளாண்மையிலான செயற்றிட்டம் சார்ந்த அபிவிருத்தி, ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆகிய துறைகளில் காணப்பட்டன.

## ஊழியர் சேம நிதியம்

ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் நியதிகளின்படி உதவுதொகைகள், மேலதிகக் கட்டணங்கள், நிதியத்தின் பண முதலீடுகளிலிருந்தான வருவாய் ஆகிய வற்றினைப் பெறுவதற்கும் நிதியத்தின் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்குநர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் சரியான கணக்குகளைப் பேணுவதற்கும் நன்மைகளின் மீளளிப்பை உறுப்பினர்களுக்குச் செய்வதற்குமான பொறுப்பு மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை நிருவகிப்பதனையும் நடைமுறைப்படுத்துவதனையும் மேற்கொள்ளும் தொழிற்றிணைக்களத்தின் ஊழியர் சேமநிதிய பிரிவின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### உதவு தொகைகள்

1988 இல் நிதியத்திஞல் பெறப்பட்ட உதவுதொகைகள் 1987 இன் ரூ. 21,940 இலட்சத்திற்கு எதிராக ரூ. 26,800 இலட்சமாக விளங்கின. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகை மட்டத்தினைவிட ரூ. 4,860 இலட்சம் அல்லது 22 சதவீதமான அதிகரிப்பைக் காட்டுகிறது.

### உறுப்பினர் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டியினை ஒதுக்குமுன்பாக உறுப்பினர் நிலுவைகள் 1988 திசெம்பர் 31 இல் ரூ. 247,580 இலட்சமாக விளங்கின. இது 1987 இனைவிட ரூ. 21,880 இலட்சம் அல்லது 9 சதவீதம் கூடுதலானதாகும்.

### முதலீடுகள்

ஆய்விற்குரிய ஆண்டில் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள் ஐந்து தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்களின் கடன்கரைப்பு நிதியங்கள் வசமிருந்த ரூபாக் கடன் இருப்புக்கள் என்பனவற்றில் நிதியம் 1987 இன் ரூ. 44,100 இலட்சத்திற்கு எதிராக ரூ. 69,570 இலட்சங் கொண்ட தொகையை முதலிட்டது. இது 1987 இன் முதலீட்டு மட்டத்தினைவிட ரூ. 25,480 இலட்சம் அதிகமானதாகும்.

### முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்

1988 இல் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1987 இன் ரூ. 23,790 இலட்சத்திற்கு எதிராக ரூ. 28,850 இலட்சமாக விளங்கி ரூ. 5,060 இலட்சங் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

### மீளளிப்புக்கள்

1988 இல் உறுப்பினர்களுக்கு ஊழியர் சேமநிதிய நன்மைகளின் மீளளிப்பாக வழங்கப்பட்ட மொத்தத் தொகை 1987 இன் ரூ. 5,740 இலட்சத்திற்கு மாருக ரூ. 6,000 இலட்சமாக விளங்கியது. இது ரூ. 260 இலட்சம் அல்லது 5 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. ஆய்விற்குரிய ஆண்டில் நன்மைகளின் மீளளிப்புக்காக 30,661 கோரல்கள் செலுத்தப்பட்டதுடன் இது இந்திய வம்சாவழித் தாயகம் திரும்புவோர்களிடமிருந்தான 378 கோரல்களையும் உள்ளடக்கியுள்ளது.

### உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி

ஊழியர் சேமநிதியம் இந்நிதியத்தின் பணங்களின் முதலீடுகளிலிருந்து பெறப்படும் வருவாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் உள்ள உறுப்பினர் நிலுவைகள் மீதும் வட்டியைச் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. 1988 இறுதியிலுள்ள உறுப்பினர் நிலுவைகள்மீது வழங்கப்படவேண்டிய வட்டி வீதம் 13 சதவீதமாக இருந்தது. இது முன்னைய ஆண்டில் நிலவிய வீதத்தினைவிட 0.5 சதவீத புள்ளிகள் கூடுதலானதாகும்.

வட்டி ஆண்டு முடிவில் உறுப்பினர்களின் வரவிலுள்ள திரட்டிய நிலுவையின் மீது வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் பெறப்பட்ட எல்லா உதவுதொகைகளும் இப்பணங்கள் பெறப்பட்ட திகதியைக் கருத்திற் கொள்ளாது முழு ஆண்டுக்குமான வட்டிக் கொடுப்பனவுக்குத் தகுதியுள்ளவையாகும். உதாரணமாக திசெம்பரில் பெறப்பட்ட உதவுதொகை ஆண்டின் சனவரியில் பெறப்பட்ட உதவுதொகைகளைப் போல முழு ஆண்டுக்கும் வட்டியைப் பெறுகின்றது. எனவே வட்டியின் செயற்படு வீதம் இதைவிட ஓரளவுக்கு உயர்வானதாகும்.

**ஊழியர் சேமநிதியக் கணக்குப் புத்தகத்தில் நிலுவைகளின் பதிவு**

தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதியக் கணக்குப் புத்தகத்தில் நிலுவைகளைப் பதிவு செய்தல் ஆய்விற்குரிய ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

**ஊழியர் சேமநிதிய வீடமைப்புக் கடன் திட்டம்**

வீடு/சொத்து கொள்வனவு, ஈடுகளை மீட்டல் ஆகியவற்றை உள்ளடக்கிய வீடமைப்பு நோக்கத்திற்காக உறுப்பினர்கள் தங்கள் வரவில் இருக்கும் நிலுவையின் 75 சதவீதம் வரையான தொகையினைக் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தினால் இந்நோக்கத்திற்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உறுப்பினர்களின் வரவில் இருக்கும் நிலுவைக்கான அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்துக் கடனாகப் பெறுவதற்கு அவர்களை இயலச் செய்யுமுகமாக 1988 இல் ஊழியர் சேமநிதிய சட்டம் திருத்தப்பட்டது. இது கடன் பெறுவதற்காக அசையாச் சொத்துக்களை ஈடுவைப்பதனையும் அல்லது உத்தரவாதிகளை வழங்குவதையும் தவிர்க்கிறது.

1987–1988 காலப்பகுதியில் நிதியத்தின் தொழிற்பாடுகளைக் காட்டும் ஒப்பீட்டு அடிப்படையிலான கூற்று அட்டவணை 2.11 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.11

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1987–1988**

| விடயம் | | 1987 | 1988 |
|---|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூ. ப. இ.) | ... | 2,194.3(அ) | 2680.1 |
| 2. முதலீடுகள் (ரூ. '000) | ... | 4,409.7(ஆ) | 6957.4 |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூ. ப. இ) | ... | 2,378.9 | 2884.9 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூ. ப. இ.) | ... | 573.6 | 600.4 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை | ... | 34,530 | 30,661 |
| 6. வட்டி வீதம் (%) | ... | 12.5 | 13 |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கு (ரூ. ப. இ.) | ... | 2,507.7 | 3218.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.
(ஆ) அரச பிணைகளில் மீள் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

*1988 இல் செலாவணிக் கட்டுப்பாட்டு நடைமுறைகளில் மத்திய வங்கியினுல் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன:—*

**1. ஏற்றுமதிகள்:**

*(அ) கயிற்றுத் தும்பு உற்பத்திகளுக்கான கீழ்மட்ட விலைத் திட்டம் ஒழிக்கப்பட்டமையின் காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட கயிற்றுத் தும்புகளுக்கான அடையாள விலைத் திட்டத்தினைத் தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை பின்பற்றவில்லை என்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அறிவிக்கப்பட்டனர். (1988.01.01 என நாளிடப்பட்ட எண் ஈசி/01/88 (எச்) கொண்ட தொழிற்பாட்டு அறுவுறுத்தல்கள்).*

*(ஆ) வாசனைப் பொருட்கள் மற்றும் ஏனைய உற்பத்திகளின் ஏற்றுமதி தொடர்பான கீழ்மட்ட விலைத் திட்டம் 1988.01.27 ஆம் நாளிலிருந்தும் புறக்கீடு செய்யப்பட்டது. (1988.01.27 என நாளிடப்பட்ட எண் ஈசி/03/88 (எச்) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).*

*(இ) இலங்கையிலிருந்து இறப்பரை ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற தேவைப்பாடு 1988.01.01 ஆம் நாளிலிருந்தும் நீக்கப்பட்டுவிட்டதாக அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு அறிவிக்கப்பட்டது. (1988.01.29 என நாளிடப்பட்ட எண் ஈசி/04/88 (எச்) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).*

**2. பயணம்:**

*(அ) தொழிலுக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்கள் அவர்கள் ஏற்கனவே தங்கள் அடிப்படைப் பயண உரித்துப்படியைப் பயன்படுத்தியிருந்தாலும் இலங்கை வெளிநாட்டுத் தொழில் நிறுவனத்திடமிருந்து இப்பணத்தை விதந்துரைக்கும் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டால் வான் பயணச்சீட்டு வாங்குவதற்காக 'பி' படிவத்தில் அவர்கள் செய்யும் விண்ணப்பங்களை ஒப்புதலளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அனுமதிக்கப்பட்டனர். (1988.03.16 என நாளிடப்பட்ட எண் ஈசி/06/88 (கே) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).*

*(ஆ) கப்பல் முகவர்கள், பயண முகவர்கள், வானூர்திப் போக்குவரத்து, வானூர்திப் போக்குவரத்து முகவர்கள் ஆகியோர் பயணச்சீட்டுக் கொடுப்பனவு வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்படுமிடத்து இலங்கையர் அல்லாதவர்கள் வெளிநாடு செல்வதற்குப் பயணச்சீட்டுக்களை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். (1988.05.16 இன் சுற்றறிக்கை எண் ஈசி/எஸ்எஎ/01/88 (டி) முன்னர் பயண முகவர்கள் மாத்திரம் இப்பயணச்சீட்டுக்களை வழங்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.*

(இ) இந்தியத் தொகுதிக்கு வெளியிலுள்ள நாடுகளுக்கான பயணச்சீட்டுக் களை முன்னர் அறிவிக்கப்பட்டதுபோல நான்கு ஆண்டுகளன்றி கடைசி மூன்று ஆண்டுகளில் இத்தொகுதி நாடுகளுக்குப் பயணச்சீட்டு வழங்கப் படாத பயணிகளுக்கு வழங்க முடியுமென அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். (1988.05.27 இன் எண்— ஈசி/10/88 (கே) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(ஈ) பொதுக் கூட்டு நிலையங்களைச் சேர்ந்த ஆட்களின் வியாபார நோக்கி லான வெளிநாட்டுப் பயணிகளுக்காகப் பின்வரும் அதிகரித்த படிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அனுமதிக்கப்பட் டனர்.

**1988.1.15 இன் எண் ஈசி/20/88 (பி) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்.**

| பயணம் செய்யும் ஆளின் வகை | வங்காளதேசம், பூட்டான், பர்மா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கித்தான் ஆகிய நாடுகளுக்கான பயணத்திற்கு | ஏனைய நாடுகளுக்கான பயணத்திற்கு |
|---|---|---|
| (i) பொதுக் கூட்டு நிலையங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள் | ஐ.அ. டொலர் 150 (நாளொன்றுக்கு) | ஐ.அ. டொலர் 225 (நாளொன்றுக்கு) |
| (ii) பொதுக் கூட்டு நிலையங்களின் ஊழியர்கள் | ஐ.அ. டொலர் 100 (நாளொன்றுக்கு) | ஐ.அ. டொலர் 150 (நாளொன்றுக்கு) |

(உ) இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்காகப் பின்வரும் அதிகரித்த அடிப்படைச் செலாவணிப் படிகளை வழங்குவதற்கு அதிகார மளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**1988.9.28 இன் எண் ஈசி/16/88 (கே) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்.**

| | வங்காளதேசம், பூட்டான், பர்மா, இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாக்கித்தான் ஆகிய நாடுகளுக்கான பயணத்திற்காக (இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை) | ஏனைய நாடுகளுக்கான பயணத்திற்காக (3 ஆண்டுகளுக்கு ஒரு முறை) |
|---|---|---|
| வயது வந்தவர்கள் | ஐ. அ. டொலர் 400 | ஐ.அ. டொலர் 1500 |
| 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் | ஐ.அ. டொலர் 200 | ஐ.அ. டொலர் 750 |

**3. வதிவற்ரோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

(அ) வெளிநாட்டில் தொழில் புரியும் அல்லது தொழில் புரிந்த இலங்கையர்களும் இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கை வம்சாவழியினரும் வதிவற்ரோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும், பேணுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அனுமதியளிக்கப்பட்டனர்.

(1988.05.05 இன் எண் ஈசி/08/88 (டி) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**4. வெளிநாட்டு நாணயக் கொள்வனவு**

(அ) உள்முகப் பயண அனுப்பல்கள், பயணிகள் காசோலைகள், வெளிநாட்டு நாணயம் ஆகியவற்றினைப் படிவம் 'சி' யிலான அனுமதியின்றிக் கொள்வனவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அனுமதியளிக்கப்பட்டுள்ளனர்.

(1988.12.01 இன் எண் ஈசி/22/88 (டி) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

**5. இறக்குமதிகள்:**

(அ) ஏதாவது நாட்டிலிருந்து கராம்பை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதற்கான கொடுகடன் பத்திரங்கள் வர்த்தகப் பணிப்பாளரினுல் வழங்கப்பட்ட செல்லுபடியான அனுமதிப் பத்திரம் இன்றி திறக்கப்பட முடியாதென அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அறிவிக்கப்பட்டனர். (1988.06.03 இன் எண் ஈசி/11/88 (பி) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

(ஆ) பின்வரும் விடயங்களின் இறக்குமதிக்கான கொடுகடன் பத்திரங்களைத் திறப்பதற்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரிடமிருந்தான அனுமதிப் பத்திரமொன்று அவசியமென அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகள் அறிவிக்கப்பட்டனர்.

**ஈ. கூ. ச. வகுப்பு எண்**

| | |
|---|---|
| 10.05 | —சோளம் |
| 87.05 | —சுங்கக்கூட்டுறவுச்சபை வகுப்பு தலைப்பு எண் 87.02 இல் அடங்கும் உந்துஊர்திகளுக்கான உடற் சட்டங்கள் (சிறுஊர்திகள் உட்பட) |

6. வதிவற்றோர் தடுப்புக் கணக்குகள்:

(அ) வதிவற்றோர் தடுப்புக் கணக்குகளிலிருந்து மொத்தமாக அனுப்பத்தக்க தொகையினை ரூ. 350,000 ஆக அதிகரிக்கும் வகையில் இக்கணக்குகளி லிருந்து ரூ. 150,000 இனைக் கொண்ட மேலதிக பணவனுப்பலை அனுமதிக்க முடியுமென அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர்கள் அறிவிக் கப்பட்டனர்.

(1988.07.15 இன் எண் ஈசி/12/88 (சி உம் எவ்உம்) இனைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்).

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின்படி அரசின் சார்பாக வங்கி பொதுப்படுகடனை முகாமைப்படுத்தலைத் தொடர்ந்து மேற்கொண்டது. அரச பிணைகள்/கடன்களை மிதக்கவிடல், திறைசேரி உண்டியல்களையும் வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும் வழங்கல், அரசின் வெளிநாட்டுக் கடன்களைப் பேணுதல் போன்றவையே 1988 இல் மேற்கொள்ளப்பட்ட முக்கிய கடமைகளாக விளங்கின.

1988 இறுதியில் வெளிநின்ற மொத்த, தேறிய பொதுப்படுகடன் முறையே ரூ. 2,238,740 இலட்சமாகவும், ரூ. 2,196,800 இலட்சமாகவும் விளங்கின. 1988 இல் ரூ. 100,000 இலட்சங் கொண்ட ரூபாப் பிணைகள் மிதக்க விடப் பட்டன. 1988 இல் ரூபாக் கடன்களின் மொத்த மீளக் கொடுப்பனவுகள் ரூ. 51,600 இலட்சமாக விளங்கியது. ஆண்டு முடிவில் வெளிநின்ற தொகை ரூ. 497,970 இலட்சமாகும்.

இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் மீதான அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லை மூன்று முறை அதிகரிக்கப்பட்டது. 1987 இறுதியில் ரூ. 350,000 இலட்ச மாக விளங்கிய அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லை ஒகத்தில் ரூ. 400,000 இலட்சத் திற்கும், ஒத்தோபரில் ரூ. 450,000 இலட்சத்திற்கும் 1988 திசெம்பரில் மேலும் ரூ. 550,000 இலட்சத்திற்கும் அதிகரிக்கப்பட்டது. இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் வாராந்த வழங்கல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ. 437,000 இலட்சமாகும். இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 41,980 இலட்சமாக விளங்கியது.

1988 இல் அரசின் நடுத்தர, நீண்டகால வெளிநாட்டுக் கடன்பாடுகளின் மீதான மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ. 117,340 இலட்சமாக விளங்கியதுடன் மீள் கொடுப்பனவுகள் ரூ. 52,350 இலட்சமாக விளங்கின. 1988 இல் வெளி நாட்டுப் பொதுப்படு கடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளும் ஏனைய கட்டணங்களும் ரூ. 33,050 இலட்சமாக விளங்கின. 1988 இறுதியில் இவ் வெளிநிற்கும் வெளிநாட்டுப் பொதுப்படுகடன் ரூ. 1,240,120 இலட்சமாக விளங்கியது. 1988 இல் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சார்பாக ரூ. 2,500 இலட்சங் கொண்ட தொகுதிக் கடன்களை வங்கி மிதக்கவிட்டது.

## பிரதேச அலுவலகங்கள்—மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை

1988 இல் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள மூன்று பிரதேச அலுவலகங்களும் அபிவிருத்தி வேலைக்கான அவற்றின் உதவியைச் சிறப்பாக, சிறிய அளவில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் எதிர் நோக்கும் உதவிகளை அதிகரித்த அளவில் வழங்குவதைத் தொடர்ந்தும் மேற் கொண்டன. செயற்றிட்டங்களை இனங்காண்பதும் மதிப்பிடுவதும், வர்த்தக வங்கி களினால் நிதியிடப்படுவதற்குச் செயற்றிட்டங்களை விதந்துரைத்தல், பயிற்சி நிகழ்ச் சித் திட்டங்கள், கிராமிய கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப் படுத்தலைக் கண்காணித்தல் என்பன அவற்றின் முக்கிய நடவடிக்கைகளில் அடங்கி யிருந்தன.

இம் மூன்று பிரதேச அலுவலகங்களின் நடவடிக்கைகள் கூடியளவு பன்முகப் படுத்தலை ஊக்குவிப்பதனையும், பிரதேச பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக் களை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. எனவே, இவற்றின் தொழிற்பாடுகள் வேளாண்மையில் மட்டுமல்லாது பலவகையான சிறிய அளவுக் கைத்தொழில்களையும் பணிகளையும் மையமாகக் கொண்டிருந்தது.

வேளாண்மைத் துறையில், புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தில் நடைமுறைப்படுத்தும் ஆற்றலை அதிகரிப்பதற்கு முயற்சி யொன்று மேற்கொள்ளப்பட்டது. மாத்தறை பிரதேச அலுவலகம் இலங்கை வங்கியுடனும் மாத்தறை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியுடனும் இணைந்து நெற்பயிர்ச் செய்கைக்கான ''மாதிரி யாயா'' கொடுகடன் முறையைத் தொடர் ந்து மேற்கொண்டது. வேளாண்மைக் கொடுகடனைப் பகிர்ந்தளிப்பதில் வழங்கு நர்களினதும் கடன்படுநர்களினதும் கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் குறைப்பதற் காகக் கொடுகடன் முகாம் முறையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

1988 இல் சுயதொழில் மீள் நிதியிடல் கொடுகடன் திட்டத்தின் கீழ் மாத்தறை, மாத்தளை அலுவலகங்கள் மொத்தம் ரூ. 30 இலட்சம் கொண்ட கடன்களை உள்ளடக்கியுள்ள முறையே 115,200 செயற்றிட்டங்களை நிதியிடலுக் காக விதந்துரைத்தன. இவ்வாண்டில் அநுராதபுர பிரதேச அலுவலகம் மொத்தம் 2,405 ஆற்றல் மிக்க செயற்றிட்டங்களை இனங் கண்டது. இச்செயற்றிட்டங்களில் 992 செயற்றிட்டங்களுக்கு வர்த்தக வங்கிகள் ஒப்புதலளித்ததுடன் 953 செயற் றிட்டங்கள் 1988 முடிவில் தொழிற்பாட்டிலிருந்தன. கடன்படுநர்களின் உதவு தொகையான ரூ. 57 இலட்சத்துடன் தொழிற்பாட்டிலிருந்த இச் செயற்றிட்டங் களிலான மொத்த மூலதன முதலீடு ரூ. 157 இலட்சமாக விளங்கியது. அநுராத புர அலுவலகம் கிணறுகள் அமைப்பதற்கான வங்கி நிதியிடலை முன்னேற்றுவதன் மூலம் பருவகாலங்கள் அல்லாத காலங்களில் பணப் பயிர்களின் பயிர்ச்செய்கைக் காக நிலத்தின் கீழுள்ள நீரைப் பயன்படுத்துவதைப் பிரபல்யமடையச் செய்வ தற்கு முயற்சியொன்றையும் எடுத்தது.

வங்கிக் கடன்களின் குறைந்தளவான மீள் கொடுப்பனவுகள் முக்கியமான பிரச்சினையொன்ருக இருந்து வருவதால் பிரதேச அலுவலகங்கள் தங்கள் தங்கள் பிரதேசங்களில் கடன் மீள் கொடுப்பனவுகளை முன்னேற்றுவதற்குச் சிறப்பான முக்கியத்துவத்தை வழங்கியுள்ளன. பிரதேச அலுவலகங்களின் பின் தொடர் நடவடிக்கைகள் பங்குபற்றும் வங்கிகளுக்குக் குறிப்பாகச் சிறிய அளவுத் துறை களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெறுதலில் உதவியுள்ளதாகத் தோன்று கிறது.

## அட்டவணை 2.12

### மாத்தறை பிரதேச அலுவலகம்—மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் புள்ளிவிபர தொகுப்பு —1988

| திட்டங்கள் | 1988 | | 1988 இறுதியில் ஒன்று சேர்ந்தது | |
|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | கடன்களின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
| 1. சுயதொழில் வாய்ப்புக்கான மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் | 91 | 1,046,440 | 1,092 | 10,057,660 |
| 2. கிராம எற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டம் ... | 01 | 5,000 | 118 | 608,685 |
| 3. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் மேல் மாதிரி யாயா நெற்பயிர்ச் செய்கைக்கான கடன்கள் ... | 137(அ) | 304,940 | 2,275 | 5,269,569 |
| 4. உயர்நில வேளாண்மைக்கான கடன்கள் ... | 39 | 127,000 | 249(ஆ) | 1,299,280 |
| 5. தேயிலை வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | 01 | 23,500 | 184 | 1,289,624 |
| 6. தெங்கு வளமாக்கி மீள் நிதியிடல் கடன் திட்டம் ... | — | — | 370 | 3,226,945 |
| 7. மொனராகல இரு சில்லு உழவு இயந்திர உழுபொறிக் கடன்கள் ... | — | — | 04 | 155,940 |
| மொத்தம் ... | 269 | 1,506,880 | 4,292 | 21,907,703 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 1988 பெரும் போகம்

(ஆ) மொனராகல மாவட்ட 42 திறந்த கிணறுகளையும் உள்ளடக்கும்.

## அட்டவணை 2.13

### அநுராதபுரப் பிரதேச அலுவலகம் : மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகள் — 1988

| துறை | வங்கிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | விதந்துரைக்கப்பட்ட தொகை ரூ. | வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|---|
| வேளாண்மை ... | 1,295 | 15,554,057 | 523 | 6,490,025 |
| கால்நடை ... | 605 | 283,973 | 154 | 1,134,785 |
| கைத்தொழில் ... | 348 | 3,664,784 | 221 | 2,348,805 |
| பணிகள் ... | 157 | 1,430,250 | 94 | 832,054 |
| மொத்தம் ... | 2,405 | 20,933,064 | 992 | 10,805,669 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 2.14

## மாத்தளைப் பிரதேச அலுவலகம்:
## மீள் நிதியிடல் கொடுகடன் தொழிற்பாடுகளின் தொகுப்பு-1988

| திட்டம் | வங்கிக்கு நெறிப்படுத்தப்பட்ட/நன்மையடைந்தோரின் அலகுகளின் எண்ணிக்கை | விதந்துரைக்கப்பட்ட கடன்களின் அளவு (ரூபா.) |
|---|---|---|
| 1. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் சிறுபோகம்/பெரும் போகம் ... | 1,493 | 6,515,937 |
| 2. சுய தொழில் வாய்ப்பு கொடுகடன் திட்டம் (மாத்தளை/கண்டி/கேகாலை) ... | 200 | 1,572,815 |
| 3. பாற்பண்ணை அபிவிருத்தி கொடுகடன் திட்டம் ... | 47 | 499,350 |
| 4. தீவு முழுவதற்குமான பண்ணை பொறித் தொகுதி கடன் திட்டம் ... | 06 | 189,250 |
| 5. ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்—(மாத்தளை மாவட்டம்) ... | 03 | 24,000 |
| 6. சிறிய நடுத்தர கைத்தொழில் கடன் திட்டம் ... | 02 | 225,000 |
| மொத்தம் ... | 1,751 | 9,026,352 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

மூன்று பிரதேச அலுவலகங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட பல் வகைப்பட்ட மீள் நிதியிடல் கொடுகடன் திட்டங்கள் பற்றிய தெரிந்தெடுக்கப் பட்ட தரவுகள் அட்டவணைகள் 2.12, 2.13, 2.14 இல் தரப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் கடன் வழங்கலுக்கு நேரடியாகத் தொடர்புள்ள நடவடிக்கை களுக்கு மேலதிகமாக பிரதேச அலுவலகங்கள் தங்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங் களையும் தொடர்ந்து மேற்கொண்டன. 1988 இல், மாத்தறை அலுவலகம் 265 எதிர்கால தொழில் முயற்சியாளர்களைக் கைத்தொழில், கோழிப் பண்ணைத் துறைகளிலும் பயிற்சியளித்தது. மாத்தளை அலுவலகம் மொத்தம் 52 செயற் றிட்டம் சார்பான பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், வேலைத்தள கலந்துரை யாடல்கள் என்பவற்றை நடத்தியதோடு 450 தொழிலற்ற இளைஞர்களுக்குக் குறிப்பாக, வேளாண்மை அடிப்படையிலான கைத்தொழிலில் பயிற்சியை வழங் கியது. அநுராதபுர அலுவலகமும் இவ்வாண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைக் குறிப்பாக வேளாண்மையிலுள்ள பயிர்ச்செய்கை நடைமுறைகளை முன்னேற்று வதற்கும் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை குறைப்பதற்கும் உதவுவதனை வலியுறுத்தும் வகையில் தொடர்ந்தும் மேற்கொண்டது.

1988 இல் பிரதேச அலுவலகங்கள் திறைசேரி உண்டியல்களின் விற்பனை யைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. இவ்வாண்டில் மாத்தறை, மாத்தளைப் பிரதேச அலுவலகங்கள் முறையே ரூ. 350 இலட்சம், ரூ. 2,960 இலட்சம் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தவேளையில் அநுராதபுர அலுவலகத்தால் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூ. 8,360 இலட்சமாக இருந்தது.

பிரதேச அலுவலகங்கள் இம் மூன்று பிரதேசங்களிலுமுள்ள வங்கிகளுக்குத் தீர்ப்பனவு வசதிகளை வழங்குவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. 1988 இல் மாத்தறைப் பிரதேச அலுவலகம் ரூ. 7,240 இலட்சம் பெறுமதியான 80,489 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தவேளையில் மாத்தளைப் பிரதேச அலுவலகம் ரூ. 3,310 இலட்சம் பெறுமதியான 59,118 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது. அநுராதபுரப் பிரதேச அலுவலகத்தால் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி ரூ. 1,600 இலட்சமாகும்.

## செய்திகளும் வெளியீடுகளும்

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திகளைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தும் நோக்கில் வங்கி அவர்களுக்குச் செய்தியையும் வெளியீடுகளையும் தொடர்ந்து வழங்கி வந்தது. இந்நோக்கத்தை அடைவதற்கு 1988 இல் வங்கியினால் பின்வரும் வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

## வெளியீடுகள்

1. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 35 (1) இன் நியதிகளின்படி 1987 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கை வெளியிடப்பட்டு நிதி, திட்டமிடல் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. ''1988 இன் முதலரைப் பகுதியின் பொருளாதாரச் செயலாற்றம்'' 1988 இன் முதலரைப் பகுதியின் பொருளாதாரத்தினைச் சுருக்கமாக மீளாய்வு செய்து வெளியிடப்பட்டது.

3. ''பொருளாதார மீளாய்வு—1987'' ஒத்தோபரில் வெளியிடப்பட்டு, 'கணக்கின் மீதான வாக்கு' சமர்ப்பிக்கப்பட்டவேளையில் நாடாளுமன்றத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டது.

4. ''இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்'' 1987 திசெம்பர் தொகுதி X 1988 இற்கான சமூக பொருளாதார தரவுக் கையேடு (இவ்வெளியீடுகள் ஆண்டுக்கான அடிப்படைத் தரவுகளைக் கொண்டுள்ளன) வெளியிடப்பட்டன.

5. 'இலங்கையின் விலைகளும் கூலிகளும் புள்ளி விபரங்கள் 1986''.

6. பருவ வெளியீடுகள் எண்கள் 18 உம், 19 உம்.

7. முனைவர் ஏ. ஜி. கருணாசேனவின் ''இலங்கைக்கான பேரண்டப் பொருளாதார அளவு மாதிரி'' உம், முனைவர் எல். எல். குணரத்னவின் ''மனித மூலதனமும் தனியார் வருவாயின் பரம்பலும்'' ஆகிய இரு நூல்களும் இலங்கை மத்திய வங்கியின் ஆராய்ச்சித் தொடரின் கீழ் இவ்வாண்டில் வெளியிடப்பட்டன.

8. 'இலங்கையின் கிராமிய கொடுகடன் செயற்றிட்டத்தின் மீதான அறிக்கை (நிறுவன ரீதியான நோக்கு)' தொகுதி 1—வி. பி. மல்கோத்திரா.

## ஆய்வரங்குகள்

இர்வினிலுள்ள கலிபோனியாப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரிய ரான, பேராசிரியர் மக்ஸ்வெல்விறை ''அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிதித்துறைப் பிரச்சனைகள்'' என்ற தலைப்பில் வங்கியில் விரிவுரை ஒன்றை நடாத்தினர். மேலும் வங்கியின் பின்வரும் அலுவலர்கள் அவர்களின் பெயர்களுக் கெதிராகக் குறிப்பிடப்பட்ட தலைப்புக்களில் விரிவுரைகளை நடாத்தினர்:—

1. திரு. ஏ. ஜே. எம். சுகைர்—''உள்நாட்டு நுகர்வின் மீதான வரிகளின் அனுபவ ரீதியான ஆய்வு—இலங்கையை மாதிரியாகக் கொண்டு (1970—85)''.
2. முனைவர் நிமால் ஏ. பெர்னுந்து—''இலங்கையில் சிறிய நெல் வேளாண்மையாளர்களுக்கான முறைசார் கொடுக்கடன்''.
3. முனைவர் டி. எஸ். விஜேசிங்க ''தாக்கமிக்க செலாவணி வீத மாற்றங் களும் வர்த்தக நிலுவையின் மீதான அவற்றின் விளைவுகளும்''.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

1988 இல் வங்கியின் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பின்வரும் ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் மத்திய வங்கி அலுவலர்களால் நிறைவு செய்யப்பட்டன:—

(1) இலங்கையின் முறைசாரா கிராமியக் கொடுகடன் சந்தையில் வட்டி வீதங்களின் பகுப்பாய்வு.

(2) இலங்கையின் வரி முறையில் சில அமைப்பு ரீதியான பண்புகள் 1950—1984.

(3) தீர்வைச் சீரமைப்பும் தாக்கம்மிக்க பாதுகாப்பும் 1984 இன் தீர்வைச் சீரமைப்பின் பின்னர் சில தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்கள் பற்றியது.

(4) இலங்கையில் உள்நாட்டு மூலவளங்களைத் திரட்டுவதிலுள்ள சிக்கல்கள்.

(5) இலங்கையில் வர்த்தக வங்கிகளின் இலாபத் தன்மையும் உற்பத்தி யாக்கமும்.

(6) தொழில்நுட்ப ரீதியான மாற்றமும் உற்பத்தியாக்க வளர்ச்சியும்: இலங்கையின் நெற்றுறையில் எதிர்கால நிலப் பயன்பாட்டுத் தன்மை யில் காணப்படும் சிக்கல்கள்.

(7) வெளிவாரித் தாக்கங்களுக்கேற்ப நாணயக் கொள்கையை நிர்ணயிப் பதைத் தீர்மானித்தல்.

## தரவுச் செய்முறைப்படுத்தல்

*1988* மாச்சில், தன்னியக்கத் தீர்வகச் செயற்றிட்டத்தை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. தன்னியக்கத் தீர்வகம் வங்கியின் தரவுச் செய்முறைப் படுத்தல் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்றது.

*1988* இல் வங்கி பணமும் வங்கித் தொழிலும் பிரிவின் புள்ளிவிபரங்களுடன் தொடர்புள்ள பொருளாதாரப் புள்ளிவிபரத் தரவு அடிப்படை மீதான வேலையை தொடங்கி அதன் முதல் கட்டத்தை நிறைவு செய்தது. *1987* இல் மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட நுகர்வோர் நிதி அளவீட்டின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்தும் வேலையையும் வங்கி நிறைவு செய்தது.

*1988* இல் மத்திய வங்கி அதன் முதன்மை கணனி அமைப்பை ஐபிஎம் *4331* மாதிரி அமைப்பு கேஜே 2 இலிருந்து ஐபிஎம் *4361* மாதிரி அமைப்பு எல் ஓ 5 இற்குத் தரமுயர்த்தியதோடு அதன் தற்போதைய தரவு பதிவு முறையைத் தரவுப் பதிவு வசதியுடன் ஓரளவுக்கு மாற்றியது.

## முகாமைக் கணக்காய்வு

வங்கியின் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் *1988* இல் அதன் வேலை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரி, மாத்தளை, மாத்தறை, அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள பிரதேச அலுவலகங்கள் உட்பட வங்கியின் பல்வேறு திணைக்களங்களின் கணக்காய்வை மேற்கொண்டது. வங்கியின் தளபாடங்கள், கருவிகள், மத்திய வங்கி நூலகத் திலும், கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் நூலகத்திலு முள்ள அனைத்து புத்தகங்கள் என்பன சரிபார்க்கப்பட்டு *1988* ஒத்தோபரில் நிறைவு செய்யப்பட்டது.

## அளவீடுகளும் தரவுச் சேகரிப்பும்

*1988* இல் மத்திய வங்கி பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப் பட்ட அதன் நாடளாவிய தரவு சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நுகர்வுப் பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள் என்பனவற்றின் சில்லறை விலைகள், பரதரப்பட்ட விடயங் களின் உற்பத்தியாளர் விலைகள், நெற்பயிர்ச் செய்கை, தேயிலை, இறப்பர், தெங்கு சிறு உடைமைகள், சிறு அளவு கட்டுமான நடவடிக்கைகள் என்பவற்றின் கூலி வீதங்கள் மீதான நடவடிக்கை ரீதியிலான தரவுகள், நாடு முழுவதிலும் பரந் துள்ள ஏறத்தாள *100* தெரிவு செய்யப்பட்ட நிலையங்களிலிருந்து சேகரிக்கப் படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் தரவுகள் வங்கியால் அதன் ஆண்டு வெளி யீடான ''விலைகள்—கூலிகள் புள்ளி விபரங்கள்'' இல் வெளியிடப்படுவதுடன் இது தொடர்பான விடயங்களின் மீது மேலும் ஆராய்ச்சி நடாத்தும் ஆராய்ச்சி யாளர்களுக்குத் தரவு மூலத்தையும் வழங்கும்.

*1988* இல் மத்திய வங்கி புதிய அளவீடுகள் எதனையும் நடாத்தாவிட்டாலும் முன்னைய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அளவீடுகள் தொடர்பான தரவுச் செய் முறைப்படுத்தலையும் அளவீட்டு அறிக்கையை நிறைவு செய்தலையும் இவ்வாண்டில் பூர்த்தியாக்கியது. இது தொடர்பாக ''திட்டமிட்ட முதலீடுகள் மீதான வியாபார

நடவடிக்கைகளின் அளவீடு—1984/85—1986/87'' இன் அறிக்கை இவ்வாண்டு பூர்த்தியாக்கப்பட்டு வெளியீட்டை எதிர்பார்த்திருக்கிறது. 1986/87 இல் வங்கி நடாத்திய நுகர்வோர் நிதியும் சமூகப் பொருளாதாரமும் என்ற அளவீட்டின் மீதான தரவுகள் 1988 இல் செய்முறைப்படுத்தப்பட்டுள்ளதோடு இவ்வறிக்கை 1989 இல் வெளியிடப்படும்.

## பயிற்சி

1988 இல் மத்திய வங்கி கல்வி சார்ந்த, கல்வி சாராத நெறிகளில் அதன் அலுவலர்களைப் பயிற்றுவிப்பதனைத் தொடர்ந்து மேற்கொண்டது. கல்வி சார்ந்த பாடநெறிகள் வெளிநாட்டிலும் இலங்கையிலுமுள்ள பொருளாதாரத்திலும் அது தொடர்பான துறைகளிலும் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு முதுமானி, முனைவர் பட்டங்களுக்கான பாடநெறிகளை உள்ளடக்கியுள்ளன. ஆய்விற்குரிய ஆண்டில் மொத்தம் 6 மத்திய வங்கி அலுவலர்கள் வெளிநாடுகளில் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளைத் தொடர்ந்தபோது ஒரு அலுவலர் இலங்கையின் பட்டப்பின் படிப்பு நெறியொன்றைத் தொடர்ந்தார். மேலும் இரு அலுவலர்கள் உள்ளூர் பல்கலைக்கழகங்களில் டிப்புளோமாப் பட்டத்திற்கான சான்றிதழைப் பெறுவதற்கான பாடநெறிகளை பின்பற்றினர்.

கல்வி சாராத் துறைகளிலான பயிற்சி செய்முறை குறுங்காலப் பயிற்சி நெறிகள், ஆய்வரங்குகள், வேலைத்தளங்கள், கல்விச் சுற்றுலாக்கள், பார்வையிடல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளதோடு முக்கியமாகக் கிராமிய அபிவிருத்தி, வேளாண்மை, கைத்தொழில் கொடுகடன்கள், வங்கித்தொழில், கணனிப் பயிற்சி போன்ற துறைகளை அடக்கியுள்ளது. எல்லாமாக 1988 இல் குறுகியகால பயிற்சிக்காக 105 அலுவலர்கள் வெளிநாடு சென்றவேளையில் மேலும் 437 அலுவலர்கள் உள்ளூர் பயிற்சி நெறிகளில் பங்கெடுத்தனர். மேலும் 1988 இல் மத்திய வங்கி அலுவலர்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியினர் இரு அரச வங்கிகளிலும் வர்த்தக வங்கித் தொழில் நடைமுறைகள் தொழிற்பாடுகளிலான சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபற்றினர்.

## ஆளணி

1988 நவெம்பர் 19 தொடக்கம் முனைவர் டபிள்யூ. இராசபுத்ர பிரான்சில் இலங்கையின் தூதுவர் நியமனத்தினை ஏற்பதற்காக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரான தனது கடமைகளைத் துறந்தார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னைநாள் மூத்த துணை ஆளுநரான முனைவர் எச். என். எஸ். கருணதிலக 1988 நவெம்பர் 19 தொடக்கம் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார்.

ஆளுநர் முனைவர் டபிள்யூ. இராசபுத்ர 1988 ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

(1) சிங்கப்பூரில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர்களது 23 வது மகாநாடு.

(2) தாய்லாந்தில் நடைபெற்ற பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் 19 வது உலக மாநாடு.

(3) இந்தியாவிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் நடைபெற்ற உலக வங்கியினது 24 வது குழுக்களின் கூட்டத்திலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் இடைநிலைக் குழுக் கூட்டத்திலும்.

(4) இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய மத்திய வங்கி ஆளுநர்களது மாநாடு.

(5) சேர்மன் சனநாயகக் குடியரசில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதி/உலக வங்கியின் 1988 ஆம் ஆண்டு வருடாந்தக் கூட்டங்கள்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத காலத்தில் மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கர வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராயும், நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

துணை ஆளுநரான திரு. ஏ. எஸ். ஜயவர்தன மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு, மூத்த துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கர வங்கிச் சேவையில் இருந்து ஓய்வுபெற முன்னரான விடுப்பில் 1988 மே 4 இல் சென்ற பின்னர் ஆளுநர் இலங்கையில் இல்லாதபோதும் வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச் சபையின் தலைவராயும் செயற்பட்டார்.

துணை ஆளுநரான முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு, ஆளுநரும், மூத்த துணை ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜயவர்தனவும் இலங்கையில் இல்லாத காலத்தில் வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராயும் நாணயச் சபையின் தலைவராயும் செயற்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் இல்லாத காலத்தில் அவருக்குப் பதிலாகத் திறைசேரியின் துணைச் செயலாளர் திரு. ஜி. குமாரணதுங்க நாணயச் சபையின் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

**நியமனங்கள்**

துணை ஆளுநர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன 1988 மே 10 ஆம் நாளிலிருந்து மூத்த துணை ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டார்.

மக்கள் வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த நிறைவேற்றுப் பணிப்பாளர் முனைவர் எஸ். ரீ. ஜீ. பர்ளுந்து 1988 மே 16 ஆம் நாளிலிருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

முகாமைக் கணக்காய்வின் மேலதிகப் பணிப்பாளர் திரு. எஸ். இரத்தினப் பிரகாசம் 1988 மாச்சு 15 ஆம் நாளிலிருந்து முகாமைக் கணக்காய்வின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சியின் மேலதிகப் பணிப்பாளரான திரு. ரி. ஜி. சௌந்தரநாயகம் 1988 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து புள்ளிவிபரவியல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

மேலதிக முதன்மைக் கணக்காளராக இருந்த செல்வி சி. அபயநாயக்க 1988 நவெம்பர் 1 ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் அபிவிருத்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனைப் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. ஏ. எம். எஸ். இரதலிய கொட 1988 சனவரி 1 ஆம் நாளிலிருந்து பணிமனைப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் 1988 யூலை 7 ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் அபிவிருத்தியின் மதியுரையாளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேம நிதியத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. ஈ. ஜே. ஆனந்தப்பா 1988 மாச்சு 16 ஆம் நாளிலிருந்து பதில் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

பதில் மேலதிகச் செயலாளர் திரு. டபிள்யூ. ஜெயசேன 1988 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து பதில் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

தரவு செய்முறைப் படுத்தலின் துணைப் பணிப்பாளர் முனைவர் திரு. எல். எல். குணரத்ன 1988 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து தரவு செய்முறைப் படுத்தலின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் தரவு செய்முறைப்படுத்தல் பதில் மேலதிகப் பணிப்பாளர் பதவியுடன் பணிமனையின் பதில் பணிப்பாளராகவும் 1988 செத்தெம்பர் 13 ஆம் நாளிலிருந்து நியமிக்கப்பட்டார்.

வங்கித் தொழில் அபிவிருத்தியின் சிறப்பு அலுவலரான முனைவர் ஜி. அபயசேகர 1988 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து வங்கித் தொழில் அபிவிருத்தியின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணைச் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. ஜே. ஆர். ஜே. ஏ. சி. மோதா 1988 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து பதில் மேலதிக செலாவணிக் கட்டுப் பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேமநிதியத்தின் துணைக் கண்காணிப்பாளர் திரு. ஈ. டபிள்யூ. ஈ. விஜயதுங்க 1988 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதியத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொருளாதார ஆராய்ச்சியின் துணைப் பணிப்பாளர் திரு. ஏ. ஜே. எம். சுகைர் 1988 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து நிறுவனத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அநுராதபுர பிரதேச அலுவலகத்தின் பிரதேச முகாமையாளரும், திணைக் களத் துணைத் தலைவருமான திரு. டி. போயகொட 1988 ஒகத்து 1 ஆம் நாளிலிருந்து திணைக்களத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

புள்ளி விபரவியல் துணைப் பணிப்பாளர் முனைவர் என். எல். சிறிசேன 1988 திசெம்பர் 23 ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற் பார்வைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணை ஆளுநரான திரு. டி. எல். கன்னங்கர அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் 1988 ஒகத்து 8 இலிருந்து நிதிக் கூட்டுநிலையங்களினது குழுவின் தலைவராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு ஆளுநரின் மதியுரையாளராகப் பதவியில் அமர்த்தப்பட்டார். 1988 நவெம்பர் 17 இலிருந்து அவர் ஆளுநருக்கான மதியுரையாளரும், நிதிக் கூட்டுநிலையங்களினது குழுவினது தலைவரும் ஆகிய கடமைகளிலிருந்து விலகினர்.

வங்கித்தொழில், நிதி நிறுவனங்களின் மேற்பார்வை மீதான மதியுரை யாளரான திரு. எச். பிரேமரத்ன 1988 யூலை 18 இலிருந்து தமது கடமையிலிருந்து விலகிக் கொண்டார்.

திரு. கே. குணரத்தினம் 1988 யூலை 1 இலிருந்து நிதிக் கூட்டுநிலையங்களின் குழுவின் உறுப்பினராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு ஆளுநரின் மதியுரையாளராகப் பதவியில் அமர்த்தப்பட்டார். 1988 நவெம்பர் 29 இலிருந்து அவர் நிதிக் கூட்டுநிலையங்களினது குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1988 திசம்பர் 31 இல் உள்ளவாறு):—**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரச திணைக் களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பன்னாட்டு அமைப்புக்கள் என்பனவற்றில் பதவியேற்பதற்காக விடுவிக்கப்பட்டனர்:—

முனைவர் என். ஈ. எச். சந்தரத்ன இலங்கை வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதித் திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமை யாற்றுவதற்காகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றுவதற்காகக் கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் அமைச்சிற்கு.

முனைவர் ஏ. சி. ரந்தெனி, திரு. எம். பி. திசாநாயக்கா, முனைவர் எஸ். எஸ். கொலம்பகே, திருவாளர்கள் ஈ. ஏ. பீ. என். டயஸ், டி. எஸ். ஐ. ஏ. ஆரியதாச, ஜே. எம். ரி. பி. ஜயசுந்தர, ஜி. ஏ. வி. பொன்சேகா, முனைவர் ஐ. குமாரசுவாமி, திருவாளர்கள் சி. லியனகே, ரி. எம். இசட். முத்தாலிப் ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

ஓய்வுபெறல்

துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கர 1988 ஓகத்து 8 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நிறுவனத் திணைக்களப் பணிப்பாளர் திரு. பி. எவ். ஜே. சில்வா 1988 செத்தெம்பர் 16 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளர் திரு. சி. செல்வசிரஞ்சீவி 1988 மாச்சு 15 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இறப்பு

வங்கித் தொழில் அபிவிருத்தி மதியுரையாளர் திரு. ஏ. எம். எஸ். இரதலியகொட 1988 திசெம்பர் 1 இல் காலமானார்.